11.04.2013

# உதய சூரியன்

*Source for readi...*

கலம் - 01, சூரியன் -32 பக்கம் :32 விலை: 20/=



## பரீட்சையில் தோல்வி என்றால்....!

## பிரிந்தோம்! சந்தித்தோம்!

இறம்பொடை புளும்பீல்ட் தோட்டத்தில் நிகழ்ந்த ஒரு உணர்வுபூர்வ சம்பவம்!

## பாம்பாக வந்த அம்மன்

வாசகர்களுக்கு இனிய சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

## முயற்சிக்கு பலன் கிடைத்தது!

### 9A சித்திகளைப் பெற்ற மாணவி ரிவானிஷா!



பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டிகளாக இருந்தால் மாத்திரமே மாணவர்கள் தமது இலக்குகளை அடையமுடியும். அதனை நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட நு/கிளைன்லைன் தமிழ் மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் நிரூபித்துள்ளார்கள். கடந்த வருடம் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிய மாணவி சுந்தரம் ரிவானிஷா 9 ஏ சித்திகளைப் பெற்று நுவரெலியா மாவட்டத்திற்கும், அக்கரப்பத்தனை பிரதேசத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இம் மாணவி ஆரம்பக் கல்வியை நு/ஆகுரோவா தமிழ் வித்தியாலயத்தில் கற்று பின் இடைநிலை கல்வியை 2009 ஆம் ஆண்டு நு/கிளைன்லைன் தமிழ் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தார்.

பாடசாலை நிர்வாகம் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காக நேர காலம் பாராமல் விசேட மேலதிக வகுப்புகள் நடத்தி மேலதிக கற்றல் நடவடிக்கையை மேற்கொண்டதன் காரணமாக இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய 29 பேரில் 21 பேர் உயர்தர வகுப்பிற்குச் செல்லும் தகுதியைப் பெற்றுள்ளனர்.

மேலும் இப்பாடசாலை மாணவி ரிவானிஷா ஒன்பது ஏ சித்திகளைப் பெற்றுள்ளார். இம்மாணவியின் வெற்றிக்கு பெற்றோர்கள் முழுப் பங்களிப்பை வழங்கியுள்ளனர். இந்த வெற்றி குறித்து இம் மாணவி தெரிவிக்கையில்:-

எனது வெற்றிக்கு அதிபர். ஆசிரியர்களும், பெற்றோரும் தான் காரணம். நான் சோர்வடையும் போதெல்லாம் ஆசிரியர்கள் ஊக்கப்படுத்திய சந்தர்ப்பங்கள் அதிகம். உண்மையான உழைப்புக்கு என்றுமே வீழ்ச்சியில்லை என்பது போல் எனது விடா முயற்சியும் நான் பெற்ற பெறுபேறுக்கு காரணமாக அமைந்தது. இப்பெறுபேறுகளை பெறுவதற்கு தரம் 10 இல் இருந்தே தயாராகினேன். எனது இலக்கை அடைவதற்கு ஒவ்வொரு நாளும் அதிகாலையில் 2.30 இற்கு எழுந்து கடுமையாக படித்ததன் காரணமாகவே தக்க பலன் கிடைத்தது. பாடசாலையில் சிறந்த பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆசிரியர்களால் வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு இதற்கு 20 இற்கு 20 என்ற அடிப்படையில் போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு மாணவர்களும் ஆர்வத்துடன் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றதை என்னால் மறக்க முடியாது என்றார்.

மு.புஷ்பராஜ்

# நஷ்டஈடு கிடைக்குமா?

என்னதான் படித்து, பட்டம் பெற்று, பெரிய வேலையில் இருந்தாலும், ஏன் நாட்டின் அரச அதிகாரிகளாகவே இருந்தாலும் அத்தியாவசிய உணவுக்குத் தேவையான அரிசி இன்றி வாழ்வது கடினம்.

நீங்கள் சோற்றில் கை வைக்க வேண்டுமானால் நாங்கள் சேற்றில் கால்வைத்தால்தான் முடியும் என்பது வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல, அதுதான் உண்மையும் கூட.

இப்படிப்பட்ட உன்னதமான விவசாயிகளே இன்று வீதியில் இறங்கி போராடுவதோடு தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2012, 2013 ஆம் ஆண்டுகளுக்கான பெரும்போக நெற்செய்கையில் 27 ஆயிரத்து 851 ஏக்கர் வயல்நிலம் முழுவதுமாக அழிவடைந்துள்ள நிலையில் 8 ஆயிரத்து 516 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் எந்தவிதமான நஷ்டஈடும் வழங்கப்படாத நிலையில் தற்கொலை செய்துகொள்ளும் மனோ நிலையில் இருப்பதாக அண்மையில் வெளியான தகவல்களின் அடிப்படையில் அறியமுடிந்தது.

மாவட்டத்தில் நெற்செய்கையில் அழிவுகளை சந்தித்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வலியுறுத்தி பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

2012 ஆம் ஆண்டு 2013 ஆம் ஆண்டுகளுக்கான பெரும்போக நெற்செய்கை சுமார் 56 ஆயிரத்து 193 ஏக்கர் நிலப்பரப்பில் 15 ஆயிரத்து 564 குடும்பங்களைச் சேர்ந்த மக்களால் மேற்கொள்ளப்பட்டது. இதில் 27ஆயிரத்து 851 ஏக்கர் நெற்செய்கை முழுவதுமாக அழிக்கப்பட்டது. இதனால் விவசாயத்தையே வாழ்வாதாரமாக நம்பி சீவியம் செய்துவந்த குடும்பங்கள் மிகப் பாரதூரமான வாழ்வாதார நெருக்கடியினை எதிர்கொண்டிருக்கின்றார்கள்.

மொத்த அழிவு தொடர்பான கணிப்பீட்டின் படி 13 கோடியே 20 இலட்சத்து 12 ஆயிரத்து 400ரூபா பெறுமதியிடப்பட்டுள்ளது. இதேபோல் 2012 ஆம் ஆண்டு சிறுபோகத்தின் போதும் 3 ஆயிரத்து 906 ஏக்கர் நெற்செய்கை நிலம் முழுவதுமாக அழிந்து போனது இதற்கும் இதுவரை எந்தவிதமான நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை.

இறுதி யுத்தத்தின் போது மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் வங்கிகளில் கடன்களைப் பெற்றே விவசாயத்தில் ஈடுபட்டு வந்தனர். தற்போது முழுவதும் அழிவடைந்த நிலையில் வங்கியில் பெற்ற கடனை செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு துணிந்துள்ளனர்.

இந்நிலையில் மாவட்ட மட்டத்தில் அழிவடைந்த விவசாய நெற்செய்கை விபரம் முழுமையாக இதுவரை கணிப்பிடப்படவில்லை. இவ் விவசாயிகளுக்கான நஷ்டஈடு வழங்குவதிலும் அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை. ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் இதுவரை எடுக்கவில்லை.

2012 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை அழிவுக்கான விபரங்கள் திரட்டப்பட்டுக் கொண்டிருப்பதாக அரசாங்க அதிபர்கள் கூறுகின்றனர். அதற்குள் ஒரு பெரும்போகம் நிறைவடைந்து அது அழிவடைந்து மீண்டும் சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆனால் அநுராதபுரம், பொலநறுவை போன்ற பிரதேசங்களில் இயற்கை அனர்த்தத்தினால் அழிவடைந்த நெற்செய்கைகளுக்கான நஷ்டஈடு உடனடியாக அந்தந்த அரசாங்க அதிபர்களாலும், பொறுப்புள்ள அதிகாரிகளாலும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதை நாம் ஊடகங்கள் வாயிலாக பரவலாக அறிந்திருக்கின்றோம்.

இம் மாவட்டத்தின் மொத்த செய்கையில் அரைவாசிக்கும் மேல், அழிவடைந்து மக்கள் வெறுங்கையுடன் நிற்கும் நிலையிலும் அந்த மக்களுக்கான நஷ்டஈட்டை பெற்றுக் கொடுப்பதில் ஏன் இவ்வளவு தாமதம் காட்டுகின்றனர் என்பது புரியவில்லை.

நாட்டின் வருமானத்தில் ஒரு பகுதியில் இந்த விவசாயிகளின் உழைப்பும் தங்கியுள்ளது. இந்நிலையில் அவர்களுக்கான நஷ்டஈட்டை பெற்றுக்கொடுத்து அவர்கள் வாழ்வதற்கு வழி செய்ய வேண்டியது அரச அதிகாரிகளின் கடமையாகவுள்ளது. இவ்விடயத்தில் அரசும் உரிய கவனம் செலுத்தி ஆக்கபூர்வமான தீர்வினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதுவே பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எதிர்பார்ப்பாகும்.

எஸ். மேகலா



# பெற்றோர் பிள்ளை உறவு

தங்களுடைய விருப்பங்களை, எதிர்பார்ப்புகளை பிள்ளைகள் மீது திணிப்பது கூடாது. பிள்ளைகளின் விருப்பத்திற்கும் திறத்திற்கும் ஏற்ற துறையில் அவர்கள் செல்வதுதான் சாதனை படைக்கவும், சலிப்பற்ற மனநிறைவு பெறவும் வழிவகுக்கும்.

பெற்ற குழந்தையை எப்படிப் பேண வேண்டும்; அதை எவ்வாறு உருவாக்க வேண்டும்? அதன் விருப்பங்களை எவ்வாறு நிறைவு செய்ய வேண்டும் என்பனவற்றையெல்லாம் சிந்திக்காது, பெற்றுப்போட்டோம், கடமை முடிந்தது அதுவாக வளரும் என்று பன்றியும் நாயும் செய்வது போல கடமையை முடித்துக் கொள்கின்ற பெற்றோர் ஒரு வகை.

பிள்ளையை எப்படியாவது படிக்க வைத்து, பெரிய வேலையில் அமர்த்தி பெருந்தொகை சம்பாதித்துவிட வேண்டும் என்ற முனைப்பில் பிள்ளைகளை பணம் ஈட்டும் கருவியாக உருவாக்க, படி படி என்று அவர்களின் இயல்புணர்வுகளையெல்லாம் முடக்கி, புத்தகப் புழுவாக நெளியச் செய்கின்றவர்கள் இன்னொரு வகை.

வயிற்றுப்பாட்டுப் பிரச்சினைக்கு கணவனும் மனைவியும் காலையிலே வீட்டைவிட்டு வேலைக்குச் சென்று, மாலையில் வீடுவந்து, உழைத்த களைப்போடு உண்டு உறங்கியெழுவது என்ற வயிறு நிறைக்கும் வாழ்க்கையில் பிள்ளைகளைக் கவனிக்க முடியாமலே காலம் கழிப்போர் மற்றொரு வகை.

பிறக்கும் பிள்ளையை வளர்க்கும் பொறுப்பு பெற்றோரை மட்டுமே சார்ந்தது, அரசு அதில் அக்கறை செலுத்தாது, அதற்கான அரச மைப்புச் சட்டமும் இல்லையென்பதால், பிள்ளைகளின் வாழ்வு பெற்றோரால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது.

எனவே, பிள்ளைகளின் வாழ்வு சிறப்பாகவும் செழுமையாகவும் அமையவேண்டும் என்றால் அது பெற்றோர் பொறுப்பிலேதான் பெரிதும் உள்ளது.

தாயின் வயிற்றில் குழந்தை கருவாக உருவாகத் தொடங்கிய நாள்முதலே அதன் வளர்ச்சியில், பாதுகாப்பில் பெற்றோரின் பங்கு தொடங்கி விடுகிறது. சத்தான, அளவான உணவு உண்ணுதல், முறையான மருத்துவச் சோதனை, மகிழ்வான, நிம்மதியான மனநிலை தாய்க்கு உரியவை. இவற்றை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது தந்தையின் பொறுப்பு.

தாயோ தந்தையோ மாறிமாறி பிள்ளையின் பார்வையில் இருக்கவேண்டும். அடிக்கடி அணைத்து மகிழ வேண்டும். மகிழ்விக்க வேண்டும்.

ஐந்து வயதிற்குள் குழந்தைக்கு எவ்வளவு சமுதாய அறிவைக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுக்க வேண்டும், சுற்றுப் புறத்தாரோடு தொடர்பு கொண்டு பழகும் வாய்ப்பை உருவாக்க வேண்டும். அதற்குப் பழக்க வேண்டும். நன்றாக ஓடியாடி, அதையொத்த பிள்ளைகளோடு விளையாட அனுமதிக்க வேண்டும். ஐந்து வயது வரை விளையாட்டுடன் கூடிய கற்பித்தலே சாலச் சிறந்தது.

**புளியம்பழம் போன்ற உறவு:**

பெற்றோர் பிள்ளை உறவு என்பது புளியம்பழம் போன்றது. புளியம்பழம் பிஞ்சாக இருக்கும்போது அதன் ஓடும் உள்ளிருக்கும் சதைப்பகுதியும் ஒன்றோடொன்று ஒட்டி, பின்னிப்பிணைந்து நிற்கும். இரண்டையும் எளிதில் பிரிக்கமுடியாது. அதேபோல் பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போது பெற்றோரும் பிள்ளையும் பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாதவர்களாய் இருக்கவேண்டும். பெற்றோர் புளியங்காயின் ஓடுபோன்றவர்கள். பிள்ளைகள் உள்ளிருக்கும் சதைப்பகுதியைப் போன்றவர்கள்.

புளியங்காய் முற்ற முற்ற அதன் ஓடு, சதைப் பகுதியை விட்டு மெல்லமெல்ல விலகும். அதேபோல் பிள்ளைகள் வளரவளர பெற்றோர் பிள்ளைகளின் நெருக்கத்தைக் குறைத்து மெல்ல மெல்ல விலகவேண்டும். புளியங்காய் நன்றாக முற்றிப் பழமானவுடன் அதன் ஓடு சதைப் பகுதியை விட்டு தனியே விலகி, உள்ளிருக்கும் சுளைப்பகுதியை பாதுகாத்து நிற்கும். அதேபோல், பிள்ளைகள் வாலிப வயதை அடைந்து, வளர்ச்சி பெற்ற முழுமனிதர்களாய் ஆகும் நிலையில், பெற்றோர் பிள்ளைகளிடமிருந்து விலகிநின்று, புளியம்பழ ஓட்டைப் போல, பிள்ளைகளைத் தங்கள் கண்காணிப்பு வலயத்திற்குள் வைத்துப் பாதுகாக்க வேண்டும்.

புளியம்பழம் பழுத்து பயன்பாட்டிற்கு வரும்போது, ஓடு சுளையிலிருந்து தனியே பிரிக்கப்பட்டு, புளிச்சுளை பயன்பாட்டிற்குச் செல்லும்போது ஓடு ஒட்டிக்கொண்டே செல்லாது. சுளை விருப்பப்படி பயன்படுத்தப்படும். பயன்படுத்தப் படவும் வேண்டும். அதேபோல் பிள்ளைகள் தங்கள் விருப்பப்படி இலக்குப்படி, தங்கள் வாழ்வைத் தீர்மானிக்க வேண்டும். பிள்ளைகள் விருப்பத்தைப் புறக்கணித்து தங்கள் விருப்பத்தை பெற்றோர்கள் அவர்கள் மீது திணிக்கக்கூடாது. புளியம்பழ ஓட்டிற்கு உள்ள பெருந்தன்மை பெற்றோருக்கும் வேண்டும்.

தோளுக்கு மிஞ்சினால் தோழன் என்ற பழமொழிக்கு ஏற்ப, பிள்ளைகள் வாலிப வயதை எட்டியதும் அவர்களிடம் நண்பர்களாய் பழகவேண்டிய கடமை பெற்றோருக்கு உரியது.

செடி சிறிதாக இருக்கும்போது அது நேராக பயனுள்ள வகையில் வளர அதனுடன் ஒரு குச்சியை நட்டுக் கட்டுவர். சுற்றிலும் பாதுகாப்பு வைப்பர். ஆனால், அது மரமாக வளரும்போது அந்தக் குச்சி மற்றும் பாதுகாப்பு அகற்றப்படும். பெற்றோர் பிள்ளைகள் மீது விதிக்கும் கட்டுப்பாடு என்பதும் அப்படித்தான் இருக்க வேண்டும். கடைசிவரை கண்டிப்பு, கட்டுக்குள் வைத்தல் என்பது பிள்ளைகளுக்கு எரிச்சல் ஊட்டும் என்பதோடு, பெற்றோர் சொல்வதற்கு எதிர்நிலையாகவும் செயல்படுவர்.

எனவே, பிள்ளைகள் வளர்ந்த பின் தோழமை உணர்வுடன் பெற்றோர் பழகவேண்டும். அவ்வாறு வளர்க்கப்படும் பிள்ளைகள் வெற்றிபெற்று சாதிக்கின்றனர். கடைசிவரை பெற்றோரிடம் பிரியமாகவும் வாழ்கின்றனர். மேலும், சமுதாய மாற்றமும் இதையே ஏற்கிறது. பெற்றோர் இவற்றை ஏற்று நடந்தால் பெற்றோர்-பிள்ளை உறவில் பிரிவும் இருக்காது. பிரச்சினையும் இருக்காது.



பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத வீட்டுத் தாதிமார்கள் தேவை (கொழும்பு)
தகைமை :
ஆண்டு 10 க்கு மேல் கல்வி கற்றிருத்தல் விரும்பத்தக்கது.
உணவு, தங்குமிட வசதிகளுடன் மாத வருமானம்
ரூ.10,000 - 18,000/-
தொடர்பு : We Care Home Nursing
T.P : 011 3053293, 0777568349

# புனிதன்


வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர் 30

மனிதர்கள் தங்களை அறிவாளிகள் போல உணர்ந்து கொள்ள வைக்கும் கேள்விகளைக் கேட்கிறார்கள். அவர்கள் பதில் பெறுவதற்காக கேள்விகள் கேட்பதில்லை. மாறாகத் தமது அறிவைக் காட்டிக் கொள்ளவே கேட்கிறார்கள். ஒரு அறிவார்ந்த கேள்வியைக் கேட்கும்போது நீங்கள் பிரமாதமாக உணருவீர்கள்.

யாருமே மனந்திறந்து தான் யாரெனக் காட்டிக் கொள்ளத் தயாராயில்லை. ஏனெனில் பல நூற்றாண்டுகளாக விடயங்கள் வெறுத்து ஒதுக்கப்பட்டுள்ளன. நீங்கள் அவற்றை மறைத்தாக வேண்டும். யாருமே தாம் வெறுத்து ஒதுக்கப்படுவதை விரும்புவதில்லை. மேலும் புகழ்ந்துரைக்கப்பட வேண்டிய விடயங்களும் உள்ளன. இவற்றை நீங்கள் காட்டிக் கொண்டாக வேண்டும். இவை உங்களிடம் இருக்கின்றனவா இல்லையா என்பது பற்றிக் கவலையில்லை.

சமுதாயம் புகழ்ந்துரைக்கும் விடயங்கள் உங்களிடம் இல்லையென்றால் இருப்பதுபோல் பாவனை செய்கிறீர்கள். இந்த பாவனை செய்பவர் சில சமயங்களில் உண்மையான நபரைவிட உண்மையாகத் தோற்றமளிப்பது சாத்தியமே. ஏனெனில் நிஜ மனிதர் ஒத்திகை பார்ப்பதில்லை. பாவனை செய்பவரோ, ஒத்திகை பார்த்து பழகுகிறார். தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக் கொள்கிறார். உள்ளே அவர்கள் எதிர்மறையான மனிதர்களே. கிரிமினல் குற்றவாளிகள் புனிதர்கள் ஆகிறார்கள். நீங்கள் புனிதர்களிடம் எதிர்பார்க்கும் மதிப்பீடுகளை, ஒழுக்கங்களைப் பயிற்சி செய்தால் போதும். உங்களுக்குள் ஓர் ஆயிரக்கணக்கான குற்றம் சார்ந்த குணாதிசயங்களை நீங்கள் கொண்டிருப்பது பற்றி யாருக்குக் கவலை? மக்கள் உங்கள் முகத்தை மட்டுமே பார்க்கிறார்கள். யாரும் உள்ளுக்குள்ளே ஆழத்தில் குதிப்பதில்லை.

புனிதனாக இருப்பது போல நடிக்கும் ஒருவனால் அதை விரும்பி ரசிக்க முடியாது. ஏனெனில் அவனது இயல்பு அதற்கு எதிராக இருக்கும். அவன் தன்னுள்ளே ஒரு போராட்டத்தை நடத்திக் கொண்டிருப்பான். எனவே அவனால் மற்றவர்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவதைப் பார்க்க முடியாது. அவன் எப்போதும் சோகமாகவே இருப்பான்.



# கோபத்திலிருந்து விடுதலை

கோபம் என்பது ஒரு அரக்ககுணம். ஒருவருக்கொருவரிடையே உள்ள மன வேறுபாட்டினாலும், மற்றவர்களின் பேச்சை, செயலை ஏற்றுக் கொள்ள முடியாத போதும் மற்றவர்கள் செய்யும் தவறுகளையும், பலவீனங்களையும் பார்த்து சகித்துக் கொள்ள முடியாததாலும் மனிதனுக்கு கோபம் வருகிறது. அதிலிருந்து விடுதலை பெறுவது எப்படி?

✱ மற்றவர்களை சரியாகப் புரிந்து கொள்ள முடியாத போதும், ஏற்றுக் கொள்ள இயலாத போதும், எதிர்க்கும் போதும் அன்புடன் அவர்களுக்கு விளக்கி சொல்லித் திருத்த முயல வேண்டும்.

✱ உங்கள் கோபத்தை உங்களாலேயே அடக்க முடியாதபோது அடுத்தவர்களின் குறைகளை ஏன் ஆராய்ச்சி செய்ய வேண்டும்? கோபித்துக் கொள்வதை விடுத்து அவர்களைத் திருத்த முயற்சி செய்யலாமே?

✱ விரோதிகளிடம் பேசும்போது கூட அன்பான வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். இதனால் உங்கள் கோபம் தலை தூக்காது. மற்றவர்களின் கோபமும் தணிந்து விடும்.

✱ அதிக வெப்ப நிலையில் உள்ள இரும்பைக்கூட குளிர்ந்த இரும்பு வெட்டி விடுகிறது. ஆகவே காரசாரமாகப் பேசுபவரிடம் அமைதியாகப் பேசினால் உறுதியாக வெற்றி கிடைக்கும்.

✱ மற்றவர்களுக்குத் துன்பம் கொடுக்கும்போது நாமும் துன்பம் அடைகிறோம் என்பதனை உணர வேண்டும். அமைதியாக காரியங்களை செய்து வெற்றி காண வேண்டும்.

✱ சிறு கோபமோ, பெரிய கோபமோ முதலில் ஏதோ பலன் கிட்டியதுபோலத் தோன்றினாலும் நன்கு யோசித்தால் அதில் நிரந்தரப் பயன் ஏதும் இல்லை என்பது விளங்கும். எல்லாவற்றிற்கும் மேல் கோபத்தினால் நாம் விலை மதிப்பற்ற நமது நிம்மதியை இழந்து விடுகிறோம்.

✱ மற்றவர்கள் நம்மீது கோபித்தால் அது நமக்குப் பிடிக்கிறதா? அதேபோல நமது கோபமும் அடுத்தவர்களுக்குப் பிடிக்காதல்லவா? ரோஜாவாக இருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும்? அதை விடுத்து ஏன் ரோஜாவின் முள்ளாக இருக்க வேண்டும்? தீர்க்கமாக சிந்தித்தால் கோபம் நம்மைவிட்டு தானாகவே ஓடிவிடும்!

# அவநம்பிக்கை

ஒரு பெரிய வியாபாரி. வெளிநாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்து பெரும் இலாபம் சம்பாதிப்பவர். அவர் அவ்வப்போது வெளி நாடுகளுக்குப் பயணம் செய்வதுண்டு. ஒரு முறை கப்பலில் வெளி நாட்டிற்கு பயணம் செய்தார். அப்போது அவரிடம் அதிக அளவில் பணமும் விலை மதிப்பில்லாப் பொருட்களும் இருந்தன. கப்பலில் அவருக்கு ஒரு அறை ஒதுக்கப்பட்டது. அவருடன் இன்னொருவருக்கும் அதே அறை கொடுக்கப்பட்டது. அந்த ஆள் பார்ப்பதற்கே படு பயங்கரமாய் அவருக்குத் தெரிந்தார். பெரிய மீசை, தலை வழுக்கையுடன் ஒற்றைக் கண்ணனாய் இருந்தார். ஆள் மிக பலசாலியாகவும் உடலில் ஆங்காங்கே காயம்பட்ட வடுக்களுடனும் இருந்தார். வியாபாரிக்கு அவர் மீது கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லை. அவரை நம்பி அறையில் விலை உயர்ந்த பொருட்களை வைக்க அவருக்கு மனம் இடம் கொடுக்கவில்லை. எனவே கப்பலில் இருந்த பெட்டக அறைக்கு சென்று பொறுப்பாளரிடம், ''இந்த விலை உயர்ந்த என் பொருட்களை இங்கு பாதுகாப்பாக வைத்திருங்கள். என்னுடன் இருப்பவர் நம்பிக்கைக்குரியவராகத் தெரியவில்லை'' பெட்டகக் காப்பாளர் சொன்னார், ''பரவாயில்லை,கொடுங்கள். நான் பாதுகாப்பாக வைத்திருக்கிறேன். ஆனால் ஒன்று. உங்கள் அறைக்கு வந்திருப்பவரும் சற்று நேரத்திற்கு முன்னே இங்கு வந்து நீங்கள் சொன்ன காரணத்தையே சொல்லி அவருடைய பொருட்களை என்னிடம் பத்திரமாக வைத்திருக்கச் சொல்லி சென்றுள்ளார்.''

நாம் எப்போதும் அடுத்தவர்களைப் பற்றி எடை போட்ட வண்ணம் இருக்கிறோம். நம்மையும் பிறர் எடை போடுவார்கள் என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. ஏற்றுக் கொள்வதுமில்லை.



ஒருவனுக்கு அதிகாரம் கிடைத்து விட்டால் மட்டும் அவனுக்கு அறிவு வளர்ச்சி அடைந்துவிட்டதாகப் பொருள் இல்லை. அவன் பதவியில் இருப்பதால், உனக்கு அறிவு வளர்ச்சி அடையவில்லை, என்பதைத்தான் நாம் சொல்ல முடியாமல் போகிறது.

# மொனராகலையில் தொடரும் பணிப் பகிஷ்கரிப்பு!

ஊவா மாகாணத்தின் மொனராகலை மாவட்டத்தில் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் குறிப்பிடத்தக்களவில் செறிந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் கொக்கோ, இறப்பர் மற்றும் கரும்பு தோட்டங்களிலேயே அதிகளவில் கூலித் தொழிலாளர்களாக உள்ளனர். இத்தோட்டங்களை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை (ஜனவசம) நிர்வகித்து வருகின்றது.

தேயிலைத் தோட்டங்களை தனியார் கம்பனிகள் குத்தகை அடிப்படையில் பொறுப்பேற்று நிர்வகித்து வருகின்றபோதும், மொனராகலை பகுதியிலுள்ள பாராவில, கும்புக்கனை, முப்பனாவளி, நக்கலை, உலந்தாவ, மறகலை, குமாரவத்தை, குமாரவத்தை தொழிற்சாலை பிரிவு மற்றும் வெலியாய ஆகிய 9 தோட்டங்களும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையினாலேயே தொடர்ந்தும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இத்தோட்டங்களில் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு மார்ச் மாதம் இறுதிப் பகுதியில் வழங்கப்பட வேண்டிய ஆதாய முற்பணம் (போனஸ்), லீவுகால கொடுப்பனவு என்பன இதுவரை வழங்கப்படவில்லை. மேலும் தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இம்மாதத்தின் முதல் வார இறுதிக்குள் வழங்கப்பட வேண்டிய மாதாந்த சம்பளமும் இதுவரை (இச்செய்தி எழுதப்படும் வரை) வழங்கப்படவில்லை.

தோட்ட நிர்வாகங்களிடம் மேற்படி கொடுப்பனவுகளை தோட்டக் கமிட்டித் தலைவர்களின் பேச்சுவார்த்தைகள் மூலம் இத்தோட்டங்களின் மக்கள் பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டதைத் தொடர்ந்து, கடந்த புதன்கிழமையிலிருந்து (ஏப்ரல் 3 ஆம் திகதி) தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு 9 தோட்டங்களிலுள்ள 1000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தமக்கு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளை உடன் பெற்றுத்தர கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ் வேலை நிறுத்தம் குறித்து கருத்து வெளியிட்ட குமாரவத்தை தோட்டக் கமிட்டித் தலைவர் எம்.புஷ்பராஜா ( இ.தொ.கா);

கடந்த இரு வருடங்களாக சித்திரைப் புத்தாண்டு நெருங்கி வரும் வேளையில் எமக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் நேரத்திற்கு வழங்கப்படுவதில்லை. சம்பளப் பணமும் அப்படித்தான். 1977 ஆம் ஆண்டிலிருந்து எமக்கு முறையாக கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. ஆனால் இன்று அந்த நிலை இல்லை. இதனால் சித்திரை புதுவருடத்தை கொண்டாட எதிர்பார்ப்புடன் இருந்த நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம். எங்கள் நிலை குறித்து அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அறிவித்த பின்னர் அவரின் பணிப்புரையின்படி பதுளையிலுள்ள இ.தொ.கா. முக்கியஸ்தர்களை அனுப்பி தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

எனினும் ஆதாய, லீவு போனஸுகளின் அரைப்பங்கை கொடுக்க தோட்ட நிர்வாகம் இணங்கியது. அதை பெற்றுக்கொண்டு மீண்டும் வேலைக்குச் செல்ல நாம் கேட்டுகொள்ளப்பட்ட போதும், எமது தொழிலாளர்கள் அதற்கு இணங்கவில்லை. எமது போராட்டம் தொடர்கிறது. தற்போது இ.தொ.கா. முழு கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்வதாக அவர் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஊவா மாகாண உறுப்பினர் அரவிந்த குமாரும் இவ்விவகாரம் தொடர்பாக ஜனவசம பொது முகாமையாளருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆக, இங்குள்ள மக்களில் அதிகளவானோர் தொழிற்சங்க ரீதியாக இ.தொ.கா.வையே சார்ந்துள்ளனர். அதற்கடுத்தபடியாக மலையக மக்கள் முன்னணி உள்ளது. தோட்டங்களில் முறையாக வேலை வழங்கி தொழிலாளர்களின் உழைப்பை பெற்ற பின்னர் அவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கும்போது தோட்ட நிர்வாகங்கள் பணம் இல்லை என்று கூறுவதை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாக பண்டிகை காலங்களில் இடம்பெறும் இவ்வாறான செயல்கள் அவர்களின் நிலைமையினைப் பெரிதும் பாதிப்படையச் செய்யும்.

எனவே, இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடன் தீவிர கரிசனை காட்டி தொழிலாளர்களின் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும். எதிர்காலத்தில் அவர்கள் இவ்வாறான சிரமங்களுக்கு முகங்கொடுக்காமல் இருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதுவே தொழிற்சங்கங்களை நம்பியிருக்கும் தொழிலாளர்களுக்கு செய்யப்படும் மிகப்பெரிய கைங்கரியமாகும்.

ஹாலிஎல நிருபர்

# பயோ Data by உதயசூரியன்

பெயர் :- சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க

பதவி :- முன்னாள் ஜனாதிபதி

நண்பர்கள்:-மஹிந்த அரசால் ஒதுக்கப்பட்டவர்கள்.

எதிரிகள் :- எனக்கு "விசிறி" வீசிவிட்டு இப்போது அவருக்கு கடைக்கு செல்லும் பச்சோந்திகள் (அரசியலில் இதெல்லாம் சகஜம் அம்மணி)

தற்போதைய விருப்பம் :- மீண்டும் அரசியலுக்குள் நுழைந்து அவருக்கு (?) ஆட்டம் காட்டுவது.

மறக்கமுடியாதது :- என்னையே கட்சியில் இருந்து ஓரங்கட்டியது (எங்கே போய் சொல்வது?).

நாட்டின் தற்போதைய நிலை :-இலங்கையில் எந்தத் துறை சுதந்திரமாக இருக்கிறது ?குடும்ப ஆட்சி தானே கொடி கட்டிப் பறக்கிறது. (உஷ்.... மெதுவாக)

எதிர்பார்ப்பு:- மகனை அரசியலுக்கு அறிமுகப்படுத்துவது (இது குடும்ப அரசியல் இல்லையா?)

தவறென கருதுவது:- அவரை(?) பிரதமராக்கியது. (யார் என்று தெரியும் தானே?)

எதிர்க்கட்சி தொடர்பாக :- வெறும் அறிக்கைகளால் ஆட்சியை கவிழ்க்கப் போவதாக அவர் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது (யார்?)

ஆச்சரியப்படுவது :- இவ்வளவு பொருளாதார நெருக்கடியிலும் மக்கள் அவர்களுக்கு வாக்களிப்பது.

மக்களுக்கு கூறுவது :- குட்ட குட்டக் குனிபவனும் மடையன், குனிய குனியக் குட்டுகிறவனும் மடையன் என்பது.



(யாவும் கற்பனை)

எம்.தாசன்




## கண்ணாமூச்சி




a நந்தினி



b மலர்




c மீனாட்சி



பொருத்தமான முகத்தைக் கண்டுபிடியுங்கள்

## சூப்பர் டூப்பர்



01




02



03



04



இந்தப் படத்திற்குப் பொருத்தமான கண்கள் எவை?

## யாரது


✱ இவர் தென்னிந்திய திரைப்பட நடிகை ஆவார்.
✱ இவர் தொலைக்காட்சி நடிகை மற்றும் தயாரிப்பாளர் ஆவார்.
✱ இவருடைய குடும்பம் பாரம்பரிய திரைப்படப் பின்னணியைச் சேர்ந்தது.
✱ இவர், இவருடைய தந்தை, அண்ணன், தங்கை ஆகியோர் பிரபல நடிகர், நடிகைகள் ஆவார்கள்.
✱ இவர் நடித்த முதல் படமே பாரதிராஜாவின் இயக்கத்தில் வெளிவந்த திரைப்படம்.
✱ இவர் சூப்பர் ஹீரோ மனைவியாவார்.

இவர் யார்?

## தூங்கும் பொலிஸ்

வீதியோரங்களில் வேகத்தடைகளைப் பார்த்திருப்பீர்கள்.


இதற்கு "தூங்கும் காவல்காரர்" (ஸ்லீப்பிங் பொலிஸ்மேன்) என்ற சிறப்புப் பெயர் உண்டு என்பதை நீங்கள் அறிவீர்களா?



படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்...

1. இது எந்தத் திரைப்படத்தின் காட்சி ?

## வார்த்தைப் புதிர் - 54




### இடமிருந்து வலம்

01. இந்தியாவின் ஒரு ஊர். மகாகவி இங்கே பிறந்திருக்கிறார்.
06. ஔவைக்கு நெல்லிக்கனி தந்த மன்னன்.
08. நீர் வாழ் உயிரினம்.
09. இந்திய கிரிக்கெட் வீரர் ஒருவரின் பெயரின் பிற்பாதி.
11. தேவையற்ற பொருட்களை போட்டு வைக்கும் இடம்.
16. ஆண் அல்ல.
17. குன்று என்பதை இப்படியும் சொல்வார்கள்.
24. கற்பில் சிறந்தவள்.
26. தீ வளர்த்து செய்யும் வழிபாடு.

### வலமிருந்து வலம்

05. சதுரங்க விளையாட்டு ஆங்கிலத்தில்.
07. பாரம்.
13. இங்கே என்பதின் எதிர்ப்பதம்.
15. ஒருவகை ஆடு.
23. ஒரு வகை பூ.
25. அவன்-- ஓர் அணுவும் அசையாது என்பார்கள் .
29. இந்த இரண்டுடன் கட்டுப்பாடும் ஒரு மனிதனுக்கு அவசியமானது

### மேலிருந்து கீழ்

01. எமனின் வாகனம்.
02. ஆயிரம் கிலோ.
03. கடன் இதை முறிக்கும் (குழம்பியுள்ளது).
04. மன்மதனின் காதலி.
08.'திரும்ப திரும்ப' என்பதைக் குறிப்பது.
12 வினா
14. மிருகத்திடமிருந்து மனிதனை வேறுபடுத்திக்காட்டுவது.
18. ஏற்றம் என்பதின் எதிர்ப்பதம் (குழம்பியுள்ளது).
19. முன்னாள் இலங்கை படைத்தளபதியின் பெயரின் ஒரு பகுதி.
22. விசேடமாக சமைக்கும் ஒருவகை சோறு.
23. வைபவத்திற்கு அழைக்கப்படுபவர் கடைசி எழுத்து இல்லை. 27. ஐம்புலன்களில். பிரதானமானது.


### கீழிருந்து மேல்


10. ஒரு அவரை இனத்துக் காய்கறி.
11. இந்துக்கள் தெய்வமாக போற்றும் விலங்கு.
13. தாய்.
15. கண்ணீரை வரவழைப்பது.
20. பல குற்றங்களை செய்தவர்களை தண்டித்து இந்தியாவில் அமுல்படுத்தப்படும் சட்டம்.
28. குளிர் காலத்தில் உதவுவது.
29. திருமணம் ஆகாத இளம் பெண்.

# இனிய தமிழ் சிங்கள சித்திரை புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!









## மலர்ந்துள்ள இனிய சித்திரை புத்தாண்டில் அனைவரின் வாழ்விலும் சுபீட்சம் பெருகட்டும்!

வர்த்தக குழு – ஊவா மாகாணம்.



# தமிழீழம் வேண்டுமா? வேண்டாமா?

தமிழீழம் மலருமா? மலராதா? சர்வதேச சமூகத்தில் பரவலாகப் பேசப்படும் விடயமாக இது மாறியுள்ளது. 2009 மே மாதம் முள்ளிவாய்க்கால் சமரின் முடிவுடன் தமிழீழம் கனவாகிவிட்டது என்று ஆர்ப்பரித்த பேரினவாதம் இன்று உலகில் தமிழீழம் என்பது பேசப்படும் வார்த்தையாகிவிட்டதைக் கண்டு திகைத்துப் போய் நிற்கின்றது. இந்தியாவின் இரண்டாவது பெரிய கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரும் பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சி நடத்தியபோது அதில் வெளியுறவு அமைச்சராக இருந்தவருமான யஸ்வந்த் சிங் கடந்த வாரம் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பான சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றியிருந்தார். அந்த உரையில் இலங்கையில் தமிழர் மீதான அடக்குமுறை தொடருமானால் தமிழீழம் விரைவில் மலர்ந்தேயாகும் என்று யஸ்வந்த் சிங் சொன்னார்.

இந்தியாவில் விரைவில் நடத்தப்படவிருக்கும் பொதுத் தேர்தலில் தற்போதைய ஆளும் இந்திர காங்கிரஸைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றும் மூத்த தலைவரின் வாயிலிருந்து தமிழீழம் மலரும் என்ற கூற்று வெளிவந்திருப்பது இலங்கையின் ஆட்சிப்பீடத்தை நிச்சயம் உலுக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இலங்கைத் தமிழருக்கு தமிழீழத்தைப் பெற்றுத்தரப் போவது கொழும்பு அரசாங்கமும் அதனை ஆதரித்து முழங்கிவரும் பேரினவாத சக்திகளுமே என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

> "கனடா அரசாங்கம் போன்று கொழும்பு அரசாங்கமும் ஐக்கிய இலங்கையினுள் வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளுக்கு தாராள மனப்பான்மையுடன் விட்டுக்கொடுத்து அரசியல் தீர்வு காணுமா?"



கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் மாநிலமாக குயபெக் அமைந்துள்ளது. அந்த நாட்டின் ஏனைய மாநிலங்கள் ஆங்கிலமொழி பேசுபவையாகும்.

ஆங்கில மொழி பேசும் மத்திய அரசாங்கம் குயபெக் மாநிலத்தைப் புறக்கணித்து பாரபட்சமாக நடத்துவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அதனையடுத்து குயபெக் மாநிலம் தனிநாடாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என குயபெக் மக்கள் கோர ஆரம்பித்தனர். கனடா மத்திய அரசாங்கம் அதனைத் தடுத்து நிறுத்த சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முன்வந்தது. உங்களுக்கு என்னென்ன அதிகாரங்களுடன் கூடிய மாநில சுயாட்சி வேண்டும். தரத் தயாராக இருக்கின்றோம். ஆனால், எம்மைவிட்டுப் பிரிந்து போகாதீர்கள் என்று கனடா மத்திய அரசாங்கம் குயபெக் மாநில மக்களுக்கு கோரிக்கைவிட்டது.

இருந்தும், குயபெக் மாநில பிரெஞ்சு மொழிபேசும் மக்களின் மனநிலையை அறிந்துகொள்ள கனடா மத்திய அரசாங்கம் சர்வசன வாக்கெடுப்பை ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் நடத்தியது. இரு தடவை நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பிலும் குயபெக் மாநில மக்கள் தனிநாடாகப் பிரிந்துபோகும் எண்ணத்திற்கு எதிராக வாக்களித்தனர். அதனையடுத்து கனடா மத்திய பாராளுமன்றம் குயபெக் மாநிலத்தை ஒரு தேசமாக (Nation) அங்கீகரிக்கும் சட்டமூலம் ஒன்றை நிறைவேற்றியது.

குயபெக் மாநிலத்தின் விஷயத்தில் கனடா அரசாங்கம் காட்டிய தாராள மனப்பான்மை வடக்கு கிழக்கு தமிழ்பேசும் தாயகம் விஷயத்தில் கொழும்பு அரசாங்கம் காட்டுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. தமிழீழம் என்ற சொல் வடக்கு கிழக்கு தமிழர்கள் வாயில் வருவதற்கு முன்னரே அச்சொல்லை முதலில் உதிர்த்தவர் இலங்கையின் முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியாக பதவி வகித்த ஜே.ஆர். ஜெயவர்தனா ஆவார். ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் 1957 இல் பிரதமராக இருந்த எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா சமஷ்டி அரசமைப்பின் கீழ் வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களுக்கு மாநில சுயாட்சி கோரிய தந்தை செல்வநாயகத்துடன் ஓர் உடன்படிக்கையைச் செய்தார். அந்த உடன்படிக்கை வடக்கு கிழக்கில் பிராந்திய சபைகள் அமைக்கப்பட்டு அதிகாரங்கள் பகிர்வு செய்யப்படும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டன. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக ஜே.ஆர். ஜெயவர்தனா, பண்டா-செல்வா உடன்படிக்கையை எதிர்த்து கொழும்பிலிருந்து கண்டிக்கு யாத்திரையை நடத்தத் திட்டமிட்டார். அப்பாத யாத்திரையில் ஜெயவர்தனா எழுப்பிய கோஷம், பண்டா-செல்வா உடன்படிக்கையை அமுல்நடத்த அனுமதித்தால் தமிழர்களுக்கு வடக்கு கிழக்கில் தனிநாடு கிடைத்துவிடும். ஆகவே, பண்டா-செல்வா உடன்படிக்கையை அமுல்நடத்த அனுமதித்தால் தமிழர்களுக்கு வடக்குக் கிழக்கில் தனிநாடு கிடைத்துவிடும். ஆகவே, பண்டா-செல்வா உடன்படிக்கை பேரினவாதத்தின் நெருக்குதலால் கிழித்தெறியப்பட்டது.

பின்னர் 30 ஆண்டு கழிந்து ஜெயவர்தனா இந்தியாவுடன் இணைந்து வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபை முறைமையை அறிமுகப்படுத்தினார். அந்த மாகாணசபை முறைமையை இல்லாதொழிக்கவேண்டும் என்று இன்று பதவியிலிருக்கும் பேரினவாத அரசாங்கம் முயற்சித்துவரும் இச்சமயத்தில், தமிழீழம் என்ற கோஷம் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து எழவில்லை. சர்வதேச சமூகத்திலிருந்து எழும்பியுள்ளது. தமிழீழம் வேண்டுமா? வேண்டாமா? என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பு வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியிலும் வைக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

குயபெக் மாநில மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஒரு நாட்டில் தீர்வு கண்ட கனடா அரசாங்கம் போன்று கொழும்பு அரசாங்கமும் ஐக்கிய இலங்கையினுள் வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளுக்கு தாராள மனப்பான்மையுடன் விட்டுக்கொடுத்து அரசியல் தீர்வு காணுமா?

இல்லையென்று வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்கள் மீதான அடக்கு முறையை தொடரின், இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர் யஸ்வந்த் சிங்கின் தமிழீழம் விரைவில் மலரும் என்ற கூற்றை மெய்ப்பிக்கப் போகின்றதா?

அ நா மி க ன்

## உயிருடன் இருக்கும்போதே தனக்கு மரணச் சடங்கு நடத்திய மாணவி



சீனாவைச் சேர்ந்த மாணவியொருவர் தான் உயிருடன் இருக்கும்போதே தனக்கான மரணச்சடங்கை நடத்தியுள்ளார். 22 வயதான ஸெங் ஜியா எனும் இம் மாணவி உயிருடன் இருக்கும்போதே தனது மரணச்சடங்கு நடைபெறுவதை அனுபவிக்க விரும்பியதாகக் கூறியுள்ளார். ஹுபே மாகாணத்தின் வூஹான் நகரைச் சேர்ந்த இம் மாணவி சவப்பெட்டியொன்றை வாங்கி அதில் படுத்துக்கொண்டார். தனது உடலானது சடலம் போல் காட்சியளிப்பதற்காக மேக்அப் கலைஞர்கள் குழுவொன்றின் மூலம் உடலை சடலம் போன்று மாற்றிக்கொண்டார்.

முழுமையான இறுதிச்சடங்கு நிகழ்வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை அவர் செய்திருந்தார்.

இந்த முட்டாள்த்தனமான போலி மரணச் சடங்கு நிகழ்வில் ஸெங் ஜியாவின் குடும்பத்தினரும், நண்பர்களும் கலந்துகொண்டனர். சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின் சவப்பெட்டியிலிருந்து எழுந்து அங்கிருந்தவர்களுக்கு நன்றி தெரிவித்த ஸெங் ஜியா, அவ்விடத்திலிருந்து நடந்து சென்றார்.

## இந்தப் பெண்ணின் மாற்றத்திற்கு என்ன காரணம்?

இந்த Emma Day (18) என்ற பெண் தனது 13 வயதில் 95 ஸ்டோன் எடையுடன் காணப்பட்டார். தற்போது 18 வயதில் 44 கிலோ எடையைக் குறைத்து 50 கிலோ எடையுடன் காணப்படுகிறார். இதற்குக் காரணம் இவர் பிஸ்கட், சொக்லேட் சாப்பிடுவது தானாம்.



## உலகம் பேசுகிறது

## வயிற்றில் வெடிகுண்டுடன் சிக்கிய மீன்

சீனாவில் மீன் வியாபாரி ஒருவர் தனது வாடிக்கையாளருக்கு மீன் விற்பனை செய்வதற்காக மீனைத் துண்டாக்கி வெட்டினார். அப்போது கத்தியில் ஏதோ ஒரு இரும்பு பொருள்பட்டது.

எனவே, அதைக் கவனமாக வெளியே எடுத்து பார்த்தார். 8 இஞ்ச் நீளத்துடன் வெடிக்காத வெடிகுண்டு ஒன்று காணப்பட்டது.

இது குறித்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் விரைந்து வந்து அந்த வெடிகுண்டைக் கைப்பற்றினர். 3 அடி நீளமுள்ள அந்த மீன் குவாங்டாங் மாகாணத்தில் உள்ள கடலில் பிடிக்கப்பட்டது. போர் விமானம் வீசிய வெடிக்காத வெடிகுண்டு கடலில் விழுந்து அதை இந்த மீன் விழுங்கியிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



## ஒரு லீற்றர் பெற்றோலில் 1000 கிலோமீற்றர் ஓடும் கார்



ஒரு லீற்றர் பெற்றோலில் 1000 கி.மீ. ஓடும் கார் ஒன்றை துபாய் மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஐக்கிய அரபு குடியரசு நாட்டின் துபாய் நகரத்தில் உள்ள உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் இணைந்து புதிய கார் ஒன்றை வடிவமைத்துள்ளனர்.

இரண்டு வருட முயற்சிக்குப் பின் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கார் ஒரு லீற்றர் பெற்றோலில் 1000 கிலோ மீற்றர் தூரம் செல்லக் கூடியது என்று மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

மிகக் குறைவான எடை கொண்ட இந்தக் காருக்கு இகோ துபாய்-1 என்று பெயரிட்டுள்ளனர். கோலாலம்பூரில் வரும் யூலை மாதம் 4 ஆம் திகதி முதல் 7 திகதி வரை பள்ளி, கல்லூரி மாணவர்கள் உருவாக்கிய குறைந்த சக்தியில் இயங்கும் வாகனங்களுக்கான போட்டி நடைபெற உள்ளது. இந்தப் போட்டிகளில், இகோ துபாய்-1 காரை மாணவர்கள் அறிமுகப்படுத்துகிறார்கள்.

## ஸ்பெயினில் காட்சியளிக்கும் வெள்ளை நகரம்



ஸ்பெயின் நாட்டின் Andalusia பகுதியில் உள்ள மலைப்பகுதியில் அமைந்துள்ள நகரம் வெள்ளை நகரமென அழைக்கப்படுகிறது.

இங்குள்ள வீடுகள் எல்லாமே வெள்ளை நிற பெயின்ட் பூசப்பட்டு ஒரேமாதிரி காட்சியளிக்கின்றன,

சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் உருவான இந்நகரம் இருநூறு இருப்பிடங்களை கொண்டுள்ளது.



# நாயை கண்டுபிடித்தால் 1 லட்சம் ரூபாய் பரிசு

## வித்தியாசமான அறிவிப்பை வெளியிட்ட எஜமானர்

ஆசை ஆசையாக வளர்த்த நாயை கண்டுபிடித்துக் கொடுத்தால் ஒரு லட்ச ரூபா பரிசு வழங்கப்படும் என, வங்கி அதிகாரி ஒருவர் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின் சென்னையைச் சேர்ந்தவர் சந்திரமவுலி. வங்கி அதிகாரி. இவர் மிகவும் பாசமாக, 'சிவா' என்ற நாயை வளர்த்து வந்தார். அலுவலகம் செல்லும் போதும், நாயைக் கூடவே அழைத்துச் செல்வார்.

கடந்த மார்ச் 4 ஆம் திகதியன்று வழக்கம் போல் நாயை, தனது அலுவலகத்திற்கு அழைத்து வந்தார். அன்று மதியம், 2:30 மணிக்கு திடீரென நாயைக் காணவில்லை. பல இடங்களில் தேடியும் கிடைக்காத நிலையில், மிகவும் துவண்டு போனார் சந்திரமவுலி. ''என் சிவாவைக் கண்டுபிடித்துக் கொடுத்தால், 1 லட்சம் ரூபா பரிசு வழங்கப்படும்'' என, துண்டுப் பிரசுரங்களை அச்சடித்து, விநியோகித்து வருகிறார்.

''சிவா மீது அப்படி என்ன பாசம்?'' என்ற கேள்விக்கு சந்திரமவுலி கூறியதாவது: இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் காலை நேரத்தில் தான் சிவாவை சந்தித்தேன். அப்போது அவன் உடம்பெல்லாம் காயமாக இருந்தது. கல்லடிபட்டு ரத்தம் சிந்தியது. அவனை வீட்டிற்கு அழைத்து சென்று, காயங்களுக்கு மருந்து போட்டேன். அதிக விலையுயர்ந்த சோப் வாங்கிப் போட்டு குளிப்பாட்டியதும், பளிச்சென மாறிவிட்டான். ரேஷன் கார்டில் சேராத, குடும்ப உறுப்பினராக இருந்தான். நான் எப்போதும் சிவநாமத்தையே உச்சரிப்பேன். அதன்படி, 'சிவா' என, பெயரிட்டேன். என் மகன் போல அவனை பாவித்தேன். நான் வங்கி செல்லும் முன் எனக்கு முன்பாக காரில் ஏறிக்கொள்வான். இருவரும் சேர்ந்தே வங்கி செல்வோம்.

பொதுவாக மதிய உணவுக்கு பின் நடைப்பயிற்சி செல்வோம். இந்த நிலையில், யார் கண் பட்டதோ, மார்ச் 4 ஆம் திகதி நான் வங்கியில் இருந்து திரும்பும் போது, சென்னை அருங்காட்சியகம் அருகே நண்பரை பார்க்க போனேன். திரும்பி வருவதற்குள் காணாமல் போய் விட்டான். ஒரு மாதமாகத் தேடியும் கிடைக்கவில்லை. எப்படி இருக்கிறான், சாப்பிட்டானா, பசியோடு திரிகிறானா என்றும் தெரியவில்லை. குடும்பத்தில் ஒருவரை பிரிந்தது போல என் மனம் வலிக்கிறது. எனவேதான், 1 லட்ச ரூபா பரிசு அறிவித்துள்ளேன். யார் மூலமாவது சிவா எனக்கு கிடைப்பான் என்ற நம்பிக்கை உள்ளது.

இவ்வாறு, சிவா பற்றி பேசியவர், தவறியும் கூட, 'நாய்' என்று ஒரு முறை கூட சொல்லவில்லை. மனிதாபிமானமிக்க இம் மனிதரை பற்றி நினைக்கும்போதே வியப்பாக உள்ளது. இவரின் நாய்...! மன்னிக்கவும் இவரின் சிவா இவருக்கு திரும்பக் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை நாம் பிரார்த்திக்கிறோம்.




# ஜப்பானின் சில அதிசய தகவல்கள்

தன்னம்பிக்கைக்கும் உழைப்பிற்கும் நேர்மைக்கும் உலக நாடுகள் உதாரணம் காட்டும் அளவுக்கு உயர்ந்து நிற்கிறது ஜப்பான். ஜப்பானியர்களின் இந்தப் பண்புகளுக்கு காரணம் என்னவாக இருக்கும். ஜப்பானின் சில தகவல்களைப் பார்ப்போம்!

* ஜப்பானில் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் சேர்ந்து ஒவ்வொரு நாளும் பதினைந்து நிமிடங்களை தங்கள் பாடசாலை மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்கிறார்கள்.

* ஜப்பானில் நாய் வளர்ப்பவர்கள் தன் பிராணிகளின் கழிவுகளை அகற்றுவதற்காக வெளியில் செல்லும்போது விசேட பை ஒன்றினை கட்டாயமாக எடுத்துச் செல்வர்.

* ஜப்பானில் சுகாதார ஊழியர்கள் ''சுகாதார பொறியியலாளர்'' என அழைக்கப்படுகிறார். ஒரு சுத்தப்படுத்துனர் எழுத்து மற்றும் வாய் மொழிமூல பரீட்சையின் பின்னரே தெரிவுசெய்யப்படுகிறார்.

* ஜப்பானில் இயற்கை வளங்கள் என்று எதுவுமில்லை. அத்துடன் வருடத்திற்கு நூற்றுக்கணக்கான பூமி அதிர்ச்சிகள் அங்கு ஏற்படுகின்றன. ஆனால் ஜப்பான்தான் உலகிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார நாடாகும்.

* ஜப்பானில் முதலாம் ஆண்டு தொடக்கம் ஆறாம் ஆண்டு வரையான மாணவர்களுக்கு மற்றவர்களுடன் எப்படிப் பழக வேண்டும் என சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

* ஜப்பான் மக்கள் உலகிலேயே மிகப் பெரிய பணக்காரர்களாக இருந்தாலும் அவர்கள் ஒரு போதும் தங்களுக்கென்று வேலைக்காரர்கள் வைத்துக்கொள்வதில்லை.

* ஜப்பான் பாடசாலைகளில் முதலாம் ஆண்டிலிருந்து மூன்றாம் ஆண்டு வரை பரீட்சைகளே இல்லை. கல்வியின் நோக்கம் விடயங்களை அறிந்து கொள்ளவும் ஒழுக்க நெறிகளை கற்றுக் கொள்ளவும்தானே தவிர பரீட்சை மூலம் அவர்களை தரப்படுத்தவல்ல என்கிறார்கள்.

* ஜப்பானில் மக்கள் உணவுக் கடைகளில் எந்த விதத்திலும் உணவை வீணாக்குதல் என்பதே அங்கு இல்லை.

* ஜப்பானில் சராசரியாக ஒரு வருடத்தில் புகையிரதங்கள் தாமதமாக வந்த நேரம் ஆகக் கூடியது சுமார் 7 விநாடிகள் மாத்திரமே.

* ஜப்பானில் மாணவர்கள் பாடசாலையில் சாப்பிட்ட பின் உடனேயே அங்கேயே பல் துலக்குகிறார்கள். அவர்களுக்கு சாப்பிடும் உணவு சரியாக சமிபாடு அடையவேண்டும் என்பதற்காக சாப்பிடுவதற்கு அரை மணித்தியாலம் ஒதுக்கப்படுகிறது.



தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்
விதயாதரம்
கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

மாணவர் முழுப்பெயர் : - ..............................................

கல்வி கற்கும் பாடசாலை :- ..............................................

மாணவர்கள் விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி
"கல்விக் குரல்" யாழ். தினக்குரல்,
இல. 336 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## பகுதி : I

★ சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்



01. இவ்வுருவைக் குறிக்கும் பொருத்தமான சொற்கள்

1) பறக்கும், முட்டையிடும், பழந்தின்னும்

2) பறக்கும், பழந்தின்னும், பாலூட்டும்

3) பறக்கும், கூடுகட்டும், முட்டையிடும்

02. தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டின் கீழ்வரும் கலாசார நிகழ்வு சித்தரிப்பது.




1) ஆசீர்வதித்தல்

2) தலைக்கு எண்ணெய் தேய்த்தல்

3) முடி வெட்டுதல்

03. பின்வரும் பறவை தொடர்பான சரியான கூற்று



1) சீனாவின் தேசியப் பறவை, பறக்க முடியாது.

2) உடல் உரோமத்தால் மூடப்பட்டிருக்கும், பறக்க முடியாது.

3) பறக்க முடியாது, உடலில் இரண்டு சிறகுகள்.

★ பாடலை வாசித்து கேட்கப்படும் வினாக்களின் சரியான விடையினைத் தெரிவு செய்க.

அம்புஜம் வாடித் தளர்ந்ததம்மா – அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பிதம்மா மதிக்கின்னார்
இனியாரும் உண்டோ அம்மா.

04. அம்புஜம் என்பதன் கருத்து

1) தாமரை

2) நீலோற்பலம்

3) அல்லி

05. ஆம்பல் களிப்பதற்கான காரணம் என்ன?

1) சூரியனின் வருகையைக் கண்டு

2) சந்திரனின் வருகை கண்டு

3) சந்திரன் மறைவதைக் கண்டு

06. இவ்வுருவுடன் மிகப் பொருத்தமான சொல்



1) ஒலி

2) ஒளி

3) மின்சாரம்

07. இப்படத்துடன் தொடர்புடைய நாடு




1) இங்கிலாந்து

2) தென்னாபிரிக்கா

3) இந்தியா

பிரபல ஆசிரியர்கள் : திரு.மு.ஜெயமதன்

08. மதுரன் பொதுஅறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒருநாள் அவனது நண்பன் கேட்ட, பொது அறிவுக் கேள்விகளுக்கு அவனால் விடையளிக்க முடியவில்லை. இந்நிகழ்விற்குப் பொருத்தமான விடையாக அமைவது

1) நிறைகுடம் தளம்பாது.

2) ஆனைக்கும் அடி சறுக்கும்.

3) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

09. " காலைவாரிவிடுதல்" என்பதன் கருத்து

1) ஒருபொழுதும் உதவ முன்வருவதில்லை.

2) பொறுத்த நேரத்தில் உதவி செய்வதில்லை.

3) கால் உழைவுபோக்க காலை பிடித்துவிடுதல்.

10. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற வாக்கியம்

1) பச்சை நிறமானவை எல்லாம் கிளிகள்

2) கிளிகள் எல்லாம் பச்சை நிறமானவை அல்ல.

3) கிளிகள் எல்லாம் பறக்கும்

11. " அசௌகரியங்களை ஏற்படுத்துதல்" என்பது

1) உதவி செய்தல்

2) இடையூறு செய்தல்

3) பிரச்சாரம் செய்தல்

12. "முயற்கொம்பு தேடி அலைந்தது போல" என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பம்


1) முயலைத்தேடி அலைதல்

2) இல்லாதபொருளைத் தேடி அலைதல்

3) அலைந்து திரிந்து பொருளைப் பெறுதல்

13.

வெள்ளைப் பூக்கள் →




← பூக்கள்

← சிவப்பு பூக்கள்

X வரவேண்டிய பூக்கள்

1) சிவப்பு, வெள்ளைப் பூக்கள்

2) சிவப்பு, வெள்ளைப் பூக்கள் அல்லாதவை

3) சிவப்பு நிறப்பூக்கள்


14. ஒரு முக்கோண வடிவப் பூப்பாத்தி ஒன்றைச் சுற்றிக் கம்பங்கள் நாட்டப்பட்டிருந்தன. எந்தவொரு பக்க முழு நீளத்தையும் நோக்கினாலும் 6 கம்பங்களே காணப்பட்டன. அப்பூம்பாத்தியைச் சுற்றி நாட்டப்பட்டுள்ள கம்பங்களின் எண்ணிக்கை

1) 15

2) 18

3) 24

15. நான்கு தொழிலாளர்கள் ஒரு தொழிற்சாலைக்குச் சமூகம் தந்த நேரங்கள் பின்வரும் கடிகாரங்களில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. இவர்கள் வந்த நேர ஒழுங்கு.



காந்தி மதி விஜி ரதி

1) மதி, காந்தி, ரதி, விஜி

2) ரதி, மதி, காந்தி, விஜி

3) காந்தி, விஜி, மதி, ரதி

16. ஒரு நிகழ்ச்சியின் 5 சந்தர்ப்பங்களுக்குரிய உருக்கள் ஒழுங்கு வரிசையின்றி ABCDE எனத் தரப்பட்டுள்ளன. அவ்வுருக்களில் காணப்படும் நிகழ்ச்சிகளின் சரியான ஒழுங்கு வரிசை இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.





1) DCABE

2) BECDA

3) EBCDA

17.




1) 22 2) 11 3) 28

18.

| | |
|---|---|
| 5 | 4 |
| 20 | 9 |

| | |
|---|---|
| 7 | 6 |
| 42 | 13 |

| | |
|---|---|
| 8 | 8 |
| 64 | 16 |

| | |
|---|---|
| 10 | ? |
| 80 | 18 |

1) 80 2) 10 3) 8

## வினாத்தாள் - 02 1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர் முழுப்பெயர் : - ..........................................................

கல்வி கற்கும் பாடசாலை :- ..........................................................

★ எல்லா வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின் படி விடை எழுதுக.

**01. பின்வரும் பகுதியை வாசிக்குக.**

உண்மை பேசுவதிலே என்றும் உறுதியாக இருந்தவர் பாரதியார். உள்ளத்திலே உண்மை ஒளி உண்டானால் வாக்கினிலே ஒளி உண்டாகும் என்பார். எனவே தான் பாரதியாரின் வாக்கிலிருந்து பிறந்த கவிதைகள் ஒளி பெற்று, உயிர் பெற்று, என்றும் நின்று உலவும் அமரத்தன்மை பெற்றதாயிருக்கின்றன.

உண்மை பற்றி பாரதியார் கூறியதாவது " உண்மை இன்பத்துக்கு நல்லுறுதி, உண்மைதான் பரம்பொருளைக் காட்டுகின்ற கண்ணாடி, எப்போதும் எக்காலத்திலும் எந்தநிலையிலும் உண்மையிலிருந்து மாறக்கூடாது. பிறர் உன்னை ஏமாற்றுவதையோ நீ பிறரை ஏமாற்றுவதையோ தடுக்க வேண்டும்.

பாரதியார் பொய் சொல்வதை மிகப்பெரிய பாவமாகக் கருதினார். எனவேதான் "பொய்மை இகழ்" என்றார். பாப்பாவிற்குக் கூறுவதிலே கூட "பொய் சொல்லக்கூடாது பாப்பா" என்றார்.

பொய் இல்லாவிட்டால் பார்வை நேராகும்
கவனி!
பொய் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்
பயம் தீர்ந்தால் நேரே பார்க்கலாம்
கவனி!
பொய் தீர்ந்தால் பயம் தீரும்!
பயம் தீர்ந்தால் பொய் தீரும்!

பொய்யை விடுத்து மெய்யே பேசி உலகில் புகழ் பெறுவதையே பாரதியார் விரும்பினார். உண்மைதான் தெய்வம் உண்மையை நேர்மையாலே காக்க வேண்டும். எல்லாப் பேறுகளிலும் உண்மைப் பேறுதான் பெருமையுடையது. இவை பாரதி வாசகங்கள்

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

01) உண்மை பேசுவதில் உறுதியாய் இருந்தவர் யார்?

______________________________

02) எதை தடுக்க வேண்டும் என்று பாரதியார் கூறினார்?

______________________________

03) பாரதியார் எதனை பாவமாகக் கருதினார்?

______________________________

04) உலகில் எவ்வாறு புகழ் பெறவேண்டும் என்று பாரதியார் விரும்பினார்?

______________________________

05) உண்மையை எதனால் காக்க வேண்டும் என்று பாரதியார் கூறினார்?

______________________________

06) இப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

( 6 X 1 = 6 புள்ளிகள் )

______________________________

**02. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

01) வரும் / நீரை/ குளத்து/குழப்பதற்கு/ விலங்குகள்

______________________________

02) தோட்டத்தில் / மரங்களை/ விவசாயி/ நட்டான்

( 2 X 1 = 2 புள்ளிகள் )

______________________________

**03. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

01) மரஞ்செடி கொடிகள் எவற்றைத் தருகின்றன.

______________________________

02) பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன

( 2 X 1 = 2 புள்ளிகள் )

______________________________

**04. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.**

01) ஏட்டிக்குப் போட்டி : – ______________________________

02) கைகழுவுதல் :- ______________________________

( 2 X 1 = 2 புள்ளிகள் )

**05. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

01) இரக்கப் போனாலும் சிறக்கப்போ

______________________________

02) ஆழமறியாமல் காலை விடாதே

( 2 X 1 = 2 புள்ளிகள் )

______________________________

**06. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.**

01) எதிர்க்கரை, நீர்நிலையின் மறுகரை

______________________________

02) முத்தமிழுள் ஒன்று

______________________________

03) கோட்டையைச் சுற்றியுள்ள ஆழமான நீர்நிலை

( 3 X 1 = 3 புள்ளிகள் )

**07. பின்வரும் தமிழ் சொல்லிற்கு பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.**

01) காலை :- ______

02) மாலை :- ______

03) இரவு :- ______

( 3 X 2 = 6 புள்ளிகள் )

**08. கருத்தை தமிழில் எழுதுக.**

01) Shall we sing a song :- ______

02) Please open your book :- ______

03) May I come in? :- ______

( 3 X 2 = 6 புள்ளிகள் )

**09. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.**

01) கிரி சுது பாட்டய ______

02) மெய மகே மேசய ______

( 2 X 2 = 4 புள்ளிகள் )

**சரியான விடையின் கீழே கோடு இடுக.**

**10. பின்வருவனவற்றுள் இரவு நேரத்தில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?**

01) முருங்கை 02) தாமரை
03) கறிவேப்பிலை 04) அகத்தி

**11. பின்வருவனவற்றுள் உணவு உண்ணல் தொடர்பான நற்பழக்கங்களுள் அடங்காத விடயம் எது?**

01) போதுமான அளவு உணவை மட்டும் பகிர்ந்து கொள்ளுதல்
02) உணவில் அகற்ற வேண்டிய பகுதிகளை நிலத்தில் சிந்தாமல் ஒரு புறம் வைத்தல்
03) வாயிலிருந்து சத்தம் எழாதவாறு உணவை உண்ணுதல்
04) தேசிய உணவுகளை மட்டும் உண்ணுதல்

**12. புகைவண்டி பற்றிய மிகச் சரியானது**

01) தனியார் சொத்து
02) பொதிகளைக் கொண்டு செல்லும்
03) பிரத்தியேகப் பாதையில் செல்லும்

**13. கப்பல் பற்றிய மிகச் சரியானது**

01) நீர், பயணம், சாரதி
02) கடல், பயணம், விமானி
03) நீர், பயணம், மாலுமி

**14. பின்வரும் பிராணிகளுள் ஊர்வன அல்லாதது**

01) பாம்பு 02) தவளை
03) ஆமை 04) உடும்பு

**15. தையலை அலங்காரத்துக்காகப் பயன்படுத்தப்படும் தையல் முறைகளில் ஒன்று**

01) சங்கிலித் தையல்
02) கம்பளித் தையல்
03) மீன்முள்ளுத் தையல்
04) வெட்டுக்கழுத்துத் தையல்

**16. தொல்பொருட் பெறுமதிமிக்கதாகவும் கலைத்துவப் பெறுமதி மிக்கதாகவும் உள்ள இடம்**

01) பானம் 02) கொத்மலை
03) தம்புள்ள 04) சிகிரியா

**17. சோறு சமைப்பதற்காக அரிசியைக் களைவதற்கு மிகப் பொருத்தமான பாத்திரம்**

01) மட்கோப்பை 02) பானை
03) அரிக்குஞ்சட்டி 04) மண்சட்டி

**18. இந்நாட்டினுள்ளே பதிவுத்தபால் மூலம் கடிதத்தை அனுப்புவதற்கு குறைந்தபட்சம் எவ்வளவு பெறுமானமுள்ள முத்திரை தேவைப்படும்.**

01) 20.00 02) 25.00
03) 30.00 04) 35.00

**19. வயலின் ஒரு பிரிவில் இருந்து வேறொரு பிரிவுக்கு தண்ணீர் செல்வதற்கு வரம்பில் வெட்டப்பட்டிருக்கும் பாதை**

01) மடைக்கதவு 02) நீரோடை
03) வாய்க்கால் 04) கலிங்கற் தொட்டி

**20. காந்தத்துண்டை நோக்கி கவரப்படும் பொருட் சோடி**

01) பித்தளையும், இரும்பும் 02) அலுமினியம், பித்தளை
03) இரும்பும் உருக்கும் 04) இரும்பும் அலுமினியமும்

**21. இலங்கையின் ஏதாவதொரு மாகாணத்தையும் அதன் தலைநகரையும் எழுதுக.**

01) ______

02) ______

**22. ஆன்மீக நல்வாழ்வுக்காக பழகிக்கொள்ள வேண்டிய மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் நான்காவது செயற்பாடாக அமைவது.**

01) உடலைத் தளர்த்துதல் 02) உறுதிப்பாடு
03) மனதைத் தளர்த்துதல் 04) பிரார்த்தனை



அழகு..,
உடல் நலம்..,
குழந்தை வளர்ப்பு..,
சாதனை மகளிர்..,
ஆலோசனை..,
உளவியல்..,

# சிநேகிதியே

## தையல் பயிற்சி

### டைட் பாவாடை

* பின்பகுதிக்கு Open வைத்து தைக்கும் பாவாடை

தேவையான அளவு


உயரம் - 35

* சீட் உயரம் - 8

* இடுப்பின் சுற்றளவு
= 24/4
= $6+\frac{1}{2}+1\frac{1}{2}$
= 8

* சிட் பகுதி (சுற்றளவு)
= 34/4
= $8\frac{1}{4}+\frac{1}{2}+\frac{3}{4}$
= $9\frac{3}{4}$

* வாட்டி பகுதி
= 33/4
= $8\frac{1}{4}+\frac{1}{2}$
= $8\frac{3}{4}$





தையல் கலையின் பரிமாணங்கள் தருபவர் :- திருமதி. ராஜேஸ்வரி குமார் - பண்டாரவளை

# எளிய அழகுக் குறிப்புகள்



* தேங்காய் எண்ணெயில் மஞ்சள் தூளை போட்டுக் குழைத்து உடம்பிற்கு தடவி, பயற்றமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.
* ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.
* முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக் கடி எலுமிச்சை சாற்றைத் தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.
* பருமனாக இருப்பவர்கள் எடையைக் குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் பாதி எலுமிச்சை பழச்சாற்றைப் பிழிந்து அதனுடன் அரை ஸ்பூன் தேன் கலந்து குடித்தால் எடை குறையும்.
* கூந்தலில் எண்ணெய்ப் பசை அதிகமாக இருந்தால், முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு பிறகு குளிக்க வேண்டும். இதனால் எண்ணெய்ப்பசை நீங்கி முடி அழகு பெறும்.
* தேநீரில் உள்ள தேயிலையை வடிகட்டிய பின், எலுமிச்சை சாறைப் பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.
* தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஒலிவ் ஒயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

# சோன் பப்டி



**தேவையான பொருட்கள்:**

கடலை மா - 1 1/2 கப்
கோதுமை மா - 1 1/2 கப்
பால் - 2 டேபிள் கரண்டி
சர்க்கரை - 2 1/2 கப்
ஏலக்காய் பவுடர் - 1 தேக் கரண்டி, தண்ணீர் - 1 1/2 கப்
நெய் - 250 கிராம்

**செய்முறை:** ஒரு பாத்திரத்தில் கடலை மா மற்றும் கோதுமை மாவை நன்கு கலந்து கொள்ள வேண்டும். பின் ஒரு தாச்சியை அடுப்பில் வைத்து, அதில் நெய்யை ஊற்றி நன்கு சூடானதும், மெதுவாக அந்த மாவைப்போட்டு, லேசாக பொன்னிறத்தில் வரும்போது இறக்கிவிடவும். பின் அதனை குளிரவைக்க வேண்டும். அதேசமயம், ஒரு தாச்சியில் தண்ணீரை ஊற்றி, சர்க்கரை மற்றும் பாலை ஊற்றி, சற்று கெட்டியாகும் வரை நன்கு கொதிக்க விடவும். அந்தப்பாகு கெட்டியானதும் இறக்கி, அதனையும் குளிர வைக்க வேண்டும்.

பின் ஒரு தட்டை எடுத்துக் கொண்டு, அதில் நெய்யைத் தடவி தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு குளிர வைத்துள்ள மாவை, சர்க்கரை பாகுவுடன் கரண்டியை வைத்து கிளற வேண்டும். அவ்வாறு கிளறும் போது நீளநீளமாக மாவானது சுருளும். அதுவும் குறைந்தது 1 இன்ச் நீளத்தில் இருக்குமாறு கிளற வேண்டும். பின் அதனை அந்த தட்டில் ஊற்றி, அதன் மேல் ஏலக்காய் பவுடரைத் தூவி, குளிர வைக்க வேண்டும். பின்னர் அதனை சதுர வடிவத் துண்டுகளாக்கி, பொலிதீன் பையில் வைத்து, அதன் மேல் பாதாம் மற்றும் கஜுவை வைத்து அலங்கரித்து, சுற்றி வைக்க வேண்டும்.

இப்போது சூப்பரான சோன் பப்டி ரெடி!!!

# கோடைகாலத்தில் சரும பராமரிப்பின் அவசியம்

இன்று நாட்டில் நிலவும் அதிகமான வெப்பநிலையின் காரணமாக தமது சருமங்களை பாதுகாப்பதில் மிகுந்த அக்கறை செலுத்த முடியாத நிலை பலருக்கு இருக்கும். அந்த வகையில் சிலருக்கு இந்த கோடைகாலத்தில் சருமங்களில் சிறுசிறு கொப்புளங்கள் (வியர்க்குரு) போன்றவை ஏற்பட்டு அது முகம், கழுத்து என உடலின் பல இடங்களில் வந்து அவலட்சணமாக்கி விடுகின்றன.

அலுவலங்களிலோ வீடுகளிலோ குளிரூட்டி (ஏ.சி) வசதி அல்லாதவர்களே இந்த வியர்க்குருகளினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்கின்றார் நம் அழகியற் கலை நிபுணரான தனு ரசாக்.

இவ்வாறானவர்கள் இந்த கோடைகாலங்களில் முகத்திற்கு அதிகம் ஒப்பனைகளை செய்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். தினமும் இந்த உடல் வெப்பத்தின் அளவைக் கட்டுப்படுத்த நீரையோ அல்லது அதற்கு ஏற்றாற்போல் குளிர்மையை ஏற்படுத்தக்கூடிய திரவங்களையோ அருந்திவந்தால் ஓரளவாவது இந்த வெயிலின் தாக்கத்தினால் ஏற்படும் சரும அலர்ஜிகளில் இருந்து விடுபடலாம்.

வெள்ளரிப்பிஞ்சு, திராட்சை உட்பட பழங்களை சாப்பிடலாம். பகல் நேரங்களில் இளநீர், மோர் குடிக்கலாம் இவற்றினால் உடல் புத்துணர்ச்சி பெறும். சருமம் வறண்டு போகாமல் தடுக்கப்படும்.

அதிகமான கார உணவுகளை இக் கோடை காலங்களில் தவிர்ப்பதே நல்லது. சிலருக்கு கோடைகாலத்திற்கு எவ்வாறு உடை அணிவது என்பதே தெரியாது. கோடைகாலங்களில் உடலிற்கு ஏற்றாற் போல் மிருதுவான பருத்தி ஆடைகளை அணிவதே சிறந்தது.

வெயிலில் அலைந்து திரிபவராக இருந்தால் அடிக் கடி முகத்தை குளிர்ந்த நீர்விட்டு கழுவிக் கொள்ளவும் இதனால் சருமத்தின் துவாரங்களில் அழுக்குகள் படிந்து முகத்தில் பருக்கள் ஏற்படாது.

எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விடயமாக இந்த கோடைகாலத்தில் தான் உடலில் அதிகமான வியர்வை வெளியேற்றப்படும்.

இந்த நேரங்களில் நாம் எமது உடலையையும் நாம் அணியும் ஆடைகளையும் மிகவும் சுத்தமாக வைத்திருப்பது மிகவும் அவசியம்.



தனு ரசாக்

சிலரின் இவ் வியர்வை மணத்தால் பொது இடங்களில் மற்றவர்களையும் முகம் சுழிக்க வைத்து சங்கடத்துக்கு ஆளாக்கிவிடுவதை நாம் பார்த்திருக்கின்றோம்.

இவ்வாறானவர்கள் தினமும் குளித்து உடலை சுத்தமாகவும், தற்போது சந்தையில் விற்பனையாகும் டியோட்ரன்ட் போன்ற வாசனைத் திரவியங்களை குளித்த பின் பூசி சுத்தமாக இருந்தால் எமக்கும் எம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கும் இது மிகவும் பெரிய உபகாரமாகும்.

அத்தோடு கோடைகாலங்களில் வெயிலில் பயணம் செய்பவர்கள் கண்களுக்கு கூலிங் கிளாஸ் அணிந்தால் அது அவர்களது கண்களைப் பாதுகாக்கும். இப்போது சந்தைகளில் சருமத்திற்கென்றே பூசக்கூடிய சன் லோஷன்கள் வந்துள்ளன.

அவற்றில் தரமானவற்றை வாங்கி உபயோகித்தால் வெயிலால் ஏற்படும் சருமப் பிரச்சினைகளில் இருந்து ஓரளவு விடுபடலாம்.

எஸ்.பிரியதர்ஷினி




படம்:-ஒன்பதுல குரு
இசை:-ஸ்ரீகாந்த் தேவா
பாடகர்கள்:- எம்.எல்.ஆர். கார்த்திகேயன், முகேஷ், வேல்முருகன்
பாடல்வரிகள் :- நா.முத்துக்குமார்

வா மச்சி வா மச்சி வீட்ட விட்டு
வாழ்ந்தவன் சொல்லுறேன்
காத காட்டு
பேச்சுலர் லைப்புக்கு சல்யூட் போட்டு
மேரேஜு வைப்புக்கு டாட்டா காட்டு...
கடலில விழுந்தா காப்பாத்தலாம்...
ஆமாண்டா....
மலையில விழுந்தா காப்பாத்தலாம்....
ஆமாண்டா...
நெருப்புல விழுந்தா காப்பாத்தலாம்
நீ மேரேஜு லைப்புல மூழ்காதடா...
எஸ்கேப்பு ஆகத்தான் வழியில்லடா....
(வா மச்சி வா மச்சி....)

கண்டபடி பியர் அடிச்சு சுத்தினது ஒரு
காலம்...
எப்பவுமே அப்போது
சந்தோஷம்தான்....
தியேட்டரில விசில் அடிச்சு
கத்தினது ஒரு காலம்....
காலை முதல் மாலை வரை
கும்மாளம்தான்...

மச்சி (கண்டபடி....)

ஐயோ அந்தக்காலம் இப்போ பிளக்
அன்ட் வைட்டு ஆச்சு
மேரேஜ் ஆனதால தினம்
கனவுகளா போச்சு
பங்காளி வா மனச தேத்திக்கோ...
(வா மச்சி வா மச்சி....)

காதல் அது இன்பம் இல்ல
கல்யாணம் இன்பம் இல்ல
எப்பவுமே இன்பம் எல்லாம்
பிரெண்ட்ஸாலத்தான்
நேத்து வர பூட்டுக்குள்ள மாட்டிக்
கிட்டு முழிச்சிருந்தோம்
இன்றுமுதல் தொலைஞ்சதடா
ஜெயிலு வாழ்க்கைதான்
ஆ.... (காதல் அது இன்பம்...)

பழைய வாழ்க்க போச்சு
இந்த புதிய வானம் சாட்சி
நெனச்சபடி வாழ நல்ல நேரம்
ஸ்டார்ட் ஆச்சி
ஹேய் பங்காளி வா சரக்க ஊத்திப்போ
(வா மச்சி வா மச்சி... 2)

## 1 நாளுக்கு 1 லட்சம் சம்பளம் வாங்கும் குழந்தை நட்சத்திரம்



சித்திரையில் நிலாச்சோறு என்ற படத்தில் நடிக்க 1 நாளைக்கு ரூ.1 லட்சம் சம்பளம் வாங்கி நடிக்கிறார் குழந்தை நட்சத்திரம் சாரா. ஆர்.சுந்தர்ராஜன் இயக்கும் இப்படத்தில் தெய்வத்திருமகள் படத்தில் நடித்த குழந்தை நட்சத்திரம் சாரா முக்கிய வேடத்தில் நடிக்கிறார். இப்படத்துக்கு நடிக்கத் தெரிந்த குழந்தை வேண்டும் என்பதற்காகவே சாராவை அழைத்து வந்தோம். 1 நாளைக்கு 1 லட்சம் ரூபா சம்பளம் தர வேண்டும் என்று அவரது பெற்றோர் கேட்டனர். அதற்கு சம்மதித்தோம். சம்பளம் கொடுத்ததற்கு நிறைவைத் தரும் வகையில் சாரா நடித்திருக்கிறார் என்கிறார் இயக்குநர் சுந்தர்ராஜன்.

தலைவா படத்தில் விஜய்யுடன் ஜோடி சேர்ந்து விட்ட போதிலும், தான் உச்ச நடிகை என்ற பந்தாக்களை அவிழ்த்து விடவில்லை அமலாபால். சமுத்திரக்கனி இயக்கும் நிமிர்ந்து நில் படத்தின் தெலுங்குப் பதிப்பில் இடுப்பு வரை சாக்கடைக்குள் நின்றபடி ஒரு காட்சியில் நடித்துள்ளார் அவர். இன்றைய சூழலில் நடிப்புக்காக எந்தவொரு நடிகையும் அமலாபால் அளவுக்கு இறங்கிவர மாட்டார்கள் என்று அவரைப் பற்றி கோலிவுட்டில் பெருமையாக சொல்லி வருகிறார் இயக்குநர் சமுத்திரக்கனி.




## சினிமாவுல எனக்கு பிடிக்காத வார்த்தை - சித்தார்த்

பாய்ஸ் படத்தில் அறிமுகமானவர் சித்தார்த். அதன்பிறகு பல படங்களில் நடித்தவர், தெலுங்கில் முன்னணி நடிகராக விளங்கி வருகிறார். இருப்பினும், தமிழ் நாட்டு நடிகரான அவருக்கு தமிழில் ஒரு நிலையான இடத்தைப் பிடித்து விடவேண்டும் என்கிற ஆர்வமே அதிகமாக இருக்கிறது. அதனால்தான் காதலில் சொதப்புவது எப்படி படத்துக்குப்பிறகு ஒரு முறை டைரக்டர் சுந்தர்.சியைப் பார்த்தவர், தமிழ்ல நிறைய படம் பண்ணனும்னு ஆசையா இருக்கேன் சார். நீங்க என்ன வச்சு படம் பண்றதா இருந்தா எப்பக் கேட்டாலும் கால்ஷீட் தர்றேன்னு சொன்னாராம் சித்தார்த். அதன்பிறகுதான் சித்தார்த்தை வச்சு படம் பண்ணனுங்கிற எண்ணம் ஏற்பட அவருக்கேற்ற கதை ரெடி பண்ணியிருக்கிறார் சுந்தர்.சி.

அதன்பிறகு உருவானதுதான் தீயா வேலை செய்யணும் குமாரு என்கிற படக்கதை. இந்தப் படத்தில் இதுவரை தமிழில் நடிக்காத அளவுக்கு பரபரவென்று பரபரப்பான நடிகராக நடித்திருக்கிறாராம் சித்தார்த். இருப்பினும், இப்படத்தின் ஓடியோ விழாவில் பேசியவர்கள் அவரை சொக்லேட் பாய் என்று புகழ்ந்து பேச டென்ஷன் ஆகிவிட்டார் சித்தார்த்.

கடைசியாக அவர் மைக்கைப் பிடித்து பேசும்போது, சினிமாவுல எனக்கு பிடிக்காத வார்த்தை ஒன்று இருக்குன்னா அது சொக்லேட் பாய்தான். ஆரம்ப காலங்களில் வேணும்னா நான் அப்படி நடிச்சிருக்கலாம்.

ஆனா இப்ப என்னோட ரூட் மாறிடுச்சு. ரொமாண்டிக் மட்டுமில்லாம, ஆக்ஷன் கதைகள்லகூட நடிச்சிருக்கேன். அதனால, இனிமே என்னை யாரும் சாக்கலேட் பாய்ன்னு சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார் சித்தார்த்.





## இமேஜை மாற்றும் நயன்தாரா!

முத்தக்காட்சி நடிகை, பிகினி நடிகை என்று தன் மீது விழுந்துள்ள இமேஜை மாற்றும் முயற்சியில் தீவிரமண்டந்துள்ளார் நயன்தாரா. அதனால் நடித்து வரும் வலை, ராஜாராணி மற்றும் இது கதிர்வேலன் காதல் ஆகிய படங்களில் துளியும் கவர்ச்சி காட்டாத குடும்பப் பாங்கான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். அத்தோடு தன்னை யாரும் இனி கவர்ச்சிக் கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது என்பதற்காக தன் நடிப்பில் நகைச்சுவையைக் கூடுதலாக வெளிப்படுத்தி வருகிறார்.

தெலுங்கில் இரண்
நடித்து வரும் அனு
உலகம் படத்தை
இப்படத்தில் பழ
நடித்துள்ள அனு
தழைகளைக் க
பழங்குடிப் பெ
அப்படியே உ
கூறுகிறார். அ
உனக்கு விரு
சிலர் கருத்து
எப்போது
இருப்பதா




சரியபட வைத்த

மலையாள!

ரிமா


## பேய் படத்தில் பவர் ஸ்டார்!

‘கண்ணா லட்டு தின்ன ஆசையா’ படத்திற்கு பின் பிசியான பவர் ஸ்டார் சீனிவாசன் காமெடி, குத்துப்பாட்டு என்று டசின் படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில் தற்போது காந்தாரி என்றொரு பேய் படத்திலும் கமிட்டாகியுள்ளார். இதில் ஒரு பேய் வீட்டில் சிக்கிக் கொள்ளும் பவர்ஸ்டார் அங்கிருந்து எப்படித் தப்பிக்கிறார் என்பதையும் காமெடியாக படமாக்குகின்றனர்.



## பாண்டிராஜ் கதைத் தேடலில்!

சிலரை போல் ஸ்டார் ஹோட்டலில் அமர்ந்து கற்பனையாக கதை எழுதுவது டைரக்டர் பாண்டிராஜுக்கு பிடிக்காது. இப்போதும் டூ-வீலரிலேயே பயணிக்கும் அவர் தான் பொது இடங்களில் பார்க்கும் மனிதர்கள், அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் அனைத்தையும் தன் படங்களில் பிரதிபலிக்கிறார். இதுவரை தான் இயக்கிய பசங்க, வம்சம், மெரினா போன்ற கதைகள் எல்லாமே, மக்களிடமிருந்து எடுத்த கதைகள் தான் என்கிறார்.



## நான்கு கோடி சம்பளம் கேட்கும் சசிகுமார்!

ஈசன் மற்றும் போராளி படங்களின் தோல்வியால் சம்பள விஷயத்தில் ரொம்ப அடக்கமாக இருந்த சசிகுமார் சுந்தரபாண்டியன் பட வெற்றிக்கு பின் தடாலடியாக நான்கு கோடி ரூபா சம்பளம் என்று அறிவித்துள்ளார்.

தற்போது நடித்து வரும் குட்டிப்புலி படமும் ஹிட்டானால் இன்னும் எத்தனை கோடி எகிறும் என்றே சொல்ல முடியாது! இதைக் கேள்விப்பட்டு சசிகுமாரை புக் செய்யக் காத்திருந்த சில பட்ஜெட் படாதிபதிகள் அவரை விட்டு விலகி விமல், விஜயசேதுபதி ஆகியோரை அணுக ஆரம்பித்து விட்டனர்.




## அனுஷ்கா அவார்ட்!

தெலுங்கில் இரண்டு சரித்திரப் படங்களில் நடித்து வரும் அனுஷ்கா தமிழில் இரண்டாம் உலகம் படத்தை ரொம்பவே எதிர்பார்க்கிறார். இப்படத்தில் பழங்குடியினப் பெண்ணாக நடித்துள்ள அனுஷ்கா உடம்பில் இலை தழைகளைக் கட்டியபடி நடித்துள்ளார். மேலும் பழங்குடிப் பெண்களின் மேனரிசத்தை அப்படியே உள்வாங்கி பிரதிபலித்துள்ளதாகவும் கூறுகிறார். அதைப்பார்த்து இப்படத்தில் உனக்கு விருது கிடைக்க வாய்ப்புள்ளது என்று சிலர் கருத்து கூறினர். அதனால்தான் இப்படம் எப்போது வெளியாகும் என்ற ஆவலுடன் இருப்பதாக கூறுகிறார் அனுஷ்கா.



## ஜூன் மாதம் டும் டும் டும்

இசை அமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ்-சைந்தவி ஆகியோரின் காதல் திருமணம் வரும் ஜூன் மாதம் சென்னையில் நடக்கிறது. ஜி.வி.பிரகாஷும் பின்னணிப் பாடகி சைந்தவியும் காதலித்து வந்தனர். ஒரே பள்ளியில் சேர்ந்து படித்ததால் இருவருக்கும் இடையே காதல் மலர்ந்தது குறிப்பிடத்தக்கது.



திரைப்படம்:- உன்னை நினைத்து
பாடகர்கள்:- சுஜாதா,
உன்னிகிருஷ்ணன்
இசை:- சிற்பி
பாடல்வரிகள்:-விக்ரமன்
==============================

ஹாப்பி நியூ இயர் ஹாப்பி
நியூ இயர் வந்ததே
அன்பைச் சொல்லி ஆசை
உள்ளம் துள்ளுதே
சூர்யகாந்தி பூபோல முகம் மாறுதே,
சுகம் சேருதே
லல லால லால லாலா
(ஹாப்பி நிவ்யர்...

*வாரணமாயிரம் சூழ வலம் செய்து*
*நாரண நம்பி நடக்கின்றான் இன்றே*
*பூரண பொற்குடம்*
*வைத்துப் புறமெங்கும்*
*தோரணம் நாட்டக் கனாக்*
*கண்டேன் தோழி*

எங்கள் வாழ்வை கவிதை
தொகுப்பாய் ஆக்கலாம்
அஞ்சல் வழியே
எல்லோருக்கும் அனுப்பலாம்
வானத்து மேகமாய்
நாம் சேர்ந்து போகலாம்
பூங்கொத்தைப் போலவே முகம்
வைத்து வாழலாம்
நம் சிரிப்பை படம்பிடித்து
வாழ்த்து மடல் வழங்கிடலாம்
நூற்றாண்டைத் தாண்டியும்
நம் பெயர் நாளை
நிலைத்திடலாமே
லல லால லால லாலா
(ஹாப்பி நிவ்யர்...)

துளசி செடியில் மழையின்
துளியை போலவே
எங்கள் விழியில்
ஆனந்தத்தின் ஈரமே
பூவில் ஓர் பாத்திரம்
நாம் செய்து பார்க்கலாம்
பால்சோறை போட்டு நாம்
பறவைக்கும் ஊட்டலாம்
குடை பிடிக்கும் தென்னை மரம்
நமது குணம் சொல்லியதே
வாழ்நாட்கள் யாவுமே
வசந்தங்கள் வீச
வாழ்ந்திருப்போமே
லல லால லால லாலா
(ஹாப்பி நிவ்யர்... )

# தவறை உணர்ந்த மயில்



ஒரு காட்டில் நிறைய விலங்குகள் வசித்து வந்தன. அனைத்து விலங்குகளும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தன. அங்கே வசித்த மயில் மட்டும் எப்போதும் மற்ற பறவைகள் மற்றும் விலங்குகளை பார்த்து பொறாமைபட்டுக்கொண்டே இருந்தது.

உதாரணத்திற்கு யானையைப் பார்த்து பெரியதாய் இருக்கிறது என்றும், மானைப் பார்த்து வேகமாக ஓடுகிறது என்றும் பொறாமைப்படும். இப்படியிருக்க ஒரு மழைக்காலத்தில் அந்த மயில் அழகாக ஆடத்தொடங்கியது.

அப்போது பாட ஆரம்பித்த மயில் தன் மோசமான குரலை எண்ணி அழத்தொடங்கியது. அப்போது அங்கு வந்த மைனா, மயிலை சமாதானப்படுத்த அருகில் சென்றது.

மயில் தனது வருத்தத்தை மைனாவிடம் கூற, மைனா மயிலிடம், நீ மிகவும் அழகாய் இருக்கிறாய், அதை நினைத்து நீ சந்தோஷப்பட்டிருக்கிறாயா? என்றது. மயில் சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு இல்லை என்று பதில் கூறியது.

இதனைக் கேட்டு சிரித்த மைனா உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் எதாவது ஒரு சிறப்பும் வலிமையும் இருக்கும், அது என்ன என்பதை உணர்ந்து அதனை மேம்படுத்த வேண்டுமே அன்றி எது நம்மிடம் இல்லையோ அதை நினைத்து வருத்தப்படவோ பொறாமைப்படவோ கூடாது என அறிவுரை கூறியது. தன் தவறை உணர்ந்த மயில் மைனாவிற்கு நன்றி தெரிவித்தது.

**நம்மிடம் இருக்கும் பலத்தை பயன்படுத்தி நமது பலவீனத்தை எதிர்கொள்ள வேண்டுமென்பதே இக்கதையின் நீதியாகும்.**

# பிச்சையெடுத்துக் கட்டிய தேவாலயம்



இத்தாலி நாட்டில், சாரனோ என்னுமிடத்தில் ''சேர்ச ஒப் தி லேடி ஒப் மிராகிள்ஸ்'''' என்ற தேவாலயம் உள்ளது. அற்புதம் நிகழ்த்தும் அன்னையின் ஆலயமான இது எழுந்ததும் ஓர் அற்புதம் தான். இதனை கட்டியது பெட்டாட்டோ என்ற பிச்சைக்காரன் தான் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

ஒரு சமயம் இவன் நோய்வாய்ப்பட்ட போது, தன் நோய் குணமாகப் பிரார்த்தனை செய்து கொண்டான். நோயும் குணமாயிற்று. உடல் தேறியதும், தன் நன்றியைக் கோவில் எழுப்பிச் செலுத்த முடிவு செய்தான் 1460-இல்.

அவனிடமோ செப்புக் காசு கிடையாது. அதனால் என்ன? மனம் தளரவில்லை. சாரனோ நெடுஞ்சாலையில் நின்று கொண்டு கையேந்தினான். முப்பதெட்டு ஆண்டுகள் பிச்சை எடுத்தான். ஆனால், அதில் கிடைத்த பொருளில் ஒரு பென்னியைக் கூட தனக்காகச் செலவு செய்து கொள்ளவில்லை. 1498-இல், அவன் பிரார்த்தித்துக் கொண்டபடி, மாதா கோவில் எழுப்பப் பொருள் சேர்ந்துவிட்டது.

பிரமாண்டமான தேவாலயம் கட்ட வேலை ஆரம்பமாயிற்று.

ஆனால், அது பூர்த்தியாகியதைக் கண்டு மகிழ, அந்தப் பிச்சைக்காரன் உயிருடன் இல்லை.

# வித்தியாசமான பொழுதுபோக்கு!

முத்திரை சேகரிப்பு, நாணயம் சேகரிப்பு என பயனுள்ள பொழுது போக்குகளை உங்களில் பலர் கடைபிடிக்கலாம்.


ஆனால் 19 ஆம் நூற்றாண்டில் வித்தியாசமான பொழுதுபோக்கு ஒன்று, உலக மக்களிடையே பரவலாக காணப்பட்டது. அது என்ன தெரியுமா? பட்டாம் பூச்சிகளை அழிக்கும் பழக்கம்தான். பல இலட்சக்கணக்கான பட்டாம்பூச்சிகளும், விட்டில் பூச்சிகளும் வேடிக்கையாகப் பிடிக்கப்பட்டன. அவை கண்ணாடித் துண்டுகளில் மாதிரிகளாகச் சேமிக்கப்பட்டன. இதனால் பல அரிய பட்டாம்பூச்சிகளும், விட்டில்பூச்சி இனங்களும் அழியும் நிலை ஏற்பட்டது. பின்னர் சட்டம் இயற்றி இந்த செயல் தடைசெய்யப்பட்டது.

ஆனாலும், இப்போதும் கூட வித்தியாசமான பட்டாம் பூச்சிகளைக் கண்டால் வேட்டையாடுவதை சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளனர்.



நிஜத்தை விட எப்போதுமே கற்பனை அழகானது. அதே நேரம் கற்பனையை விடவும் சில நேரங்களில் நிஜம் பிரமிப்பில் ஆழ்த்தி விடும். அப்படி கற்பனையையும் தாண்டி வியக்கவைக்கும் சில அழகிய அம்சங்கள்.

## சோக்கோட்ராதீவு



யேமன் நாட்டில் இருக்கும் இந்தத் தீவு, அரேபிய கடலில் உள்ளது. ஆபிரிக்காவில் இருந்து கிட்டத்தட்ட 150 மைல்கள் தள்ளி உள்ள இந்தத் தீவு பற்றி உலகைச் சுற்றி வந்த மார்க்கோபோலே கூட குறிப்பு எழுதியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.
இங்குள்ள செடிகொடி வகைகளில் 33 சதவீதம் இங்கே மட்டுமே பார்க்கக்கூடியது என்பது சிறப்பு. இங்கு காணப்படும் மரங்களில் குடை வடிவ மரம் ரொம்பவே சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கிறது.

## பாபிடால்

நியூசிலாந்தில் இருக்கும் இந்த தீவுப்பகுதி அழகின் அம்சம்.
இதில் அமைந்திருக்கும் சின்னச்சின்ன வீடுகள் அனைத்தும் மலையை லேசாகக் கிள்ளி அமைத்தார்களோ என்று எண்ணத் தோன்றும். தொலைதூரத்தில் இருந்து பார்க்கும்போது இந்த வீடுகள் மண்ணுக்குள் இருந்து முளைத்தாற்போல் அமைந்து அதன் படைப்பாற்றலை இரசிக்க வைக்கிறது. இந்த தீவின் சிறப்பு பற்றிக்கேள்விப்பட்டு வந்த ஹொலிவூட் படக்குழுவினர் இங்கே சில நாட்கள் முகாமிட்டு ''லார்டு ஒப் தி ரிங்'' என்ற படத்தின் படப்பிடிப்பை நடத்தினார்கள். அன்று முதல் இந்தத் தீவு இன்னும் பிரபலமாகி விட்டது.

## கெனோ கிறிஸ்டைல்



கொலம்பியாவில் உள்ள இந்த நதி தான் உலகிலேயே மிகவும் அழகான நதி என்கிறார்கள். இதன் சிறப்பே கலர்கலரான இதன் தண்ணீர் தான். சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, ரோஸ் என இதன் நிறம் நதியின் போக்கில் அவ்வப்போது மாறிக்கொண்டே இருக்கும். இதற்காகவே இங்கே சுற்றுலாப் பயணிகள் குவிகிறார்கள்.
இப்படி நிறம் கலர் கலராய் மாறிக்கொண்டே இருப்பதற்குப் பின்னணியில் நதியின் அடியில் காணப்படும் பாசி தான் காரணம் எனச் சொல்லப்படுகிறது. வண்ணங்களை வாரியிறைக்கும் அந்தப் பாசியின் சிறப்புப் பற்றிய ஆய்வும் தொடர்கிறது.
இதன் அழகில் ஈர்க்கப்பட்ட ஆன்மீகவாதிகள் இதை சொர்க்கத்தில் இருந்து ஓடிவரும் நதி என்று வர்ணிக்கிறார்கள்.

# இந்த வார குட்டீஸ்



பெயர்:- ஜஸ்மிக்கா
பெற்றோர்:- தமிழ்ச்செல்வம், பிரியா.
இடம் :- செங்கலடி.



பெயர்:-ஜோயல் பிலன்
பெற்றோர்:- ஜோன்,டொனிலா.
இடம் :- கொழும்பு.

**23. கண்கள், காதுகள் இரண்டின் ஊடாகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் ஊடகங்கள் கொண்ட சொற்தொகுதி**


01) பத்திரிகை, சுவரொட்டி

02) ஒலிபெருக்கி, வானொலி

03) தொலைக்காட்சி, தொலைபேசி

04) அரங்கு, தொலைக்காட்சி

**24. மேற்காட்டப்பட்ட உபகரணத்தின் பெயர்**




01) கனவுரு

02) கண்ணாடிக்குற்றி

03) ஊசித்துளைக் கமரா

04) காட்போட் பெட்டி

**25. மேற்காட்டப்பட்ட வேலையை இலகுவாக்கும் உபகரணத்தின் பெயர்**



01) குறடு

02) பாக்குவெட்டி

03) போத்தல் மூடி திறப்பான்

04) இடுக்கி

**26. காலாவதியாகிய தகரத்தில் அடைத்த மீனை உண்டதால் ஏற்படும் நோய் அறிகுறியாவது**

01) உதடுகள் வீங்குதல் 02) சொறி ஏற்படல்

03) உடலில் தடிப்புக்கள் தோன்றுதல் 04) வயிற்றுவலி, வாந்தி

**27. அரச இலட்சனையில் காணப்படும் பூ இதழ்களால் சூழப்பட்ட கையில் வாளுடன் நிற்கும் சிங்கம் குறிப்பது**

01) நாட்டையும் கட்டுப்பாடான நாட்டு மக்களையும்

02) தார்மீகத்தை

03) நிலைத்திருத்தல்

04) தன்னிறைவு

**28. சக்தி தரும் உணவுகள் கொண்ட தொகுதி**

01) பால், சோயாப் பால் 02) சோறு, ஈரப்பலாக்காய்

03) வல்லாரை, பசளி 04) பருப்பு, பயறு

**29. கழிச்சல் நோயாக்கி கிருமிகளைக் கொண்டுவரும் பிராணி**

01) நுளம்பு 02) ஈ


03) எலி 04) நரி

**30. தாவரங்களில் இரவுப் பொழுதைக் கழிக்கும் பிராணிகள்**

01) ஆந்தை, தேவாங்கு 02) காகம், குயில்

03) கொக்கு, மைனா 04) ஆடு, மாடு

**31. மேற்காட்டப்பட்ட கரை அலங்காரத்தின் பெயர்**



01) ஈரிழை

02) ஒற்றைச்சுழி

03) அரும்பு

04) பலாபொதி

**32. மின்சார வேலை செய்யும் போது பாதுகாப்பிற்காக அணிவது**

01) கையுறை 02) தலைக்கவசம்

03) ஏப்ரன் 04) உடை

**33. குறித்த நிறங்கள் இடாமல் தரப்பட்டுள்ள பின்வரும் இலச்சினைகளினிடையே இலங்கை விமான சேவையின் இலச்சினையைத் தெரிந்தெடுக்க.**

01) 02)

03) NSB 04)

**34. போக்குவரத்துக்காக சைக்கிளைக் கூடுதலாகப் பயன்படுத்துவதுடன் தொடர்புபட்ட பிழையான கூற்று**


01) சுற்றாடல் மாசடைவதைத் தடுக்கும்

02) விபத்துக்களைக் குறைக்கலாம்


03) போக்குவரத்து செலவுகளைக் குறைக்கலாம்

04) நோய்களைக் குறைக்கலாம்

**35. ஒருமின்குமிழ், இருமின்கலம், இருவயர்த் துண்டுகளைக் கொண்டு மின்குமிழை ஒளிரச் செய்யத்தக்க விதத்தை உரு 2 இன் அடைப்புக்குள் வரைந்து காட்டுக.**



**கட்டடத்தை அமைக்கும் போது பயன்படுத்தும் சில உபகரணங்கள் கீழே காணப்படுகின்றன.**



1) 2) 3) 4) 5)

**பின்வரும் செயல்கள் ஒவ்வொன்றிற்கும் பயன்படுத்துக்கூடிய உபகரணத்தின் இலக்கத்தை உரிய வெற்றிடத்தில் எழுதுக.**

**36. சுவரை அழுத்தப்படுத்தல்**

____________________

**37. வளைவின் கிடையியல்பைப் பேணுதல்**

____________________

**38. சுவரின் கிடை மட்டத்தைப் பேணுதல்**


____________________

**39. சுவரைக் கட்டும் போது நிலைக்குத்தியல்பைப் பேணுதல்**

____________________

( 30 X 1 = 30 புள்ளிகள் )

40. உருவில் ஒரு சதுரமுகி காணப்படுகின்றது அதன்



01) முகங்களின் எண்ணிக்கை யாது?

02) விளிம்புகளின் எண்ணிக்கை யாது?

03) அதன் ஒருபக்கத்தின் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது ?

( 3 X 1 = 3 புள்ளிகள் )

41. ஐம்பதாயிரத்து ஐம்பது என்பதை இலக்கங்களில் எழுதுக.

42. ஒரு தொட்டியில் நிரப்பத்தக்க நீரின் கொள்வனவு 9700 லீற்றர் ஆகும். அத்தொட்டியில் 4695 லீற்றர் நீர் உள்ளது. எஞ்சியுள்ள பகுதியை நிரப்பத் தேவைப்படும் நீரின் கனவளவு யாது?

__________ லீற்றர்

43. ஒரு பூரணமற்ற சிட்டை கீழே காணப்படுகின்றது. அதில் உள்ள ஆறு வெற்றிடங்களையும் நிரப்புக.

| இல | பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| 01 | பயிற்சிப் புத்தகங்கள் | 6 | 20 | 00 | ....... | 00 |
| 02 | பென்சில் | 2 | ..... | ...... | 19 | 00 |
| 03 | பேனை | ........... | 15 | 00 | 45 | 00 |
| 04 | கடித உறை | 3 | ...... | ....... | 6 | 00 |
| 05 | கலர்ப் பெட்டி | 2 | ...... | ....... | 65 | 00 |
| | | | மொத்தம் | | ..... | ..... |

( 6 X 1 = 6 புள்ளிகள் )

44. ஒரு கிலோ கிராம் சீனியின் விலை ரூ. 98 ஆகும். 2Kg 500g சீனியின் விலை எவ்வளவு?


45. 8m நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 45cm நீளமுள்ள 8 துண்டுகள் வெட்டப்பட்டுள்ளது. நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது ?

46. ஒரு மேசைக்கரண்டி கொள்ளத்தக்க திரவத்தின் கனவளவு 10ml ஆகும். ஒரு நோயாளிக்கு ஒரு தடவைக்கு இரண்டு தேக்கரண்டி வீதம் ஒரு நாளுக்கு மூன்று தடவை மருந்து கொடுக்கப்பட்டது. அவருக்கு ஒரு நாளுக்கு கொடுக்கப்பட்ட மருந்தின் கனவளவு யாது ?

47. 840 புத்தகங்களை ஒருவருக்கு 3 வீதம் எத்தனை பேருக்கு பகிர்ந்து கொடுக்கலாம் ?

48. பிற்பகல் 11.00 இற்கு புறப்பட இருந்த புகைவண்டி ஒன்று 20 நிமிடங்களுக்குப் பின்னர் பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 6 மணித்தியாலம் 45 நிமிடம் எடுத்தது. புகைவண்டி பயணத்தை பூர்த்தி செய்ய எடுத்த நேரம் யாது ?

49. ஆறு நகரங்களை தொடுக்கும் ஒரு பாதையின் படம் உருவில் காணப்படுகின்றது. ஒருவர் நகரம் Aயிலிருந்து தொடங்கி B,C,D,E,F ஆகிய நகரங்களினூடாகப் பாதை வழியே சென்று மறுபடியும் Aயிற்கு வருகின்றார். அவர் சென்ற மொத்தத் தூரம் யாது?




( 8 X 2 = 16 புள்ளிகள் )

50. அன்று காலை முருகன் பாடசாலை நோக்கி வீதியின் ஓரமாக நடந்து சென்று கொண்டிருந்தான். அங்கே வீதியின் மறுபுறத்தில் முதியர் ஒருவர் நடந்து வரும் போது கீழே விழுந்து விட்டார். இதைக் கண்ட முருகன் ................

**( நீர் தான் முருகன் எனக் கொண்டு ஐந்து சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்கள் அமைக்குக? சரியான எழுவாய், பயனிலை, குறியீடுகளை கவனத்திற் கொண்டு எழுதவும். )**

( 6 X 2 = 12 புள்ளிகள் )

**அதிபரின் உறுதிப்படுத்தல்**

மேற்குறித்த மாணவன் / மாணவியால் இவ்வினாப்பத்திரம் சுயமாக விடையளிக்கப்பட்டதென்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................

பதவி முத்திரையுடன் அதிபர் உறுதிப்படுத்தல்

19. அடுத்து வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்யுங்கள்

**குருதி ⟶ திருகு, குறவி ⟶ ...............**

1) துறவி

2) விறகு

3) குவிற

20. முள்ளம் பன்றியும் .................. நல்ல நண்பர்கள் என்பதில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்.

1) முயலுடன்

2) முயலுக்கு

3) முயலும்

21. சுதன் விகடகவி என்பதை ACMCA என எழுதுவான், விடம் என்பதை AMQ என எழுதுவான் ஆயின்,

**"கடகம்"** என்பதை எவ்வாறு எழுதுவான்.

1) MCQC

2) CMCQ

3) MCQC

22. பின்வரும் சொற்களானது தமிழ் எழுத்துக்களுக்கு இலக்கங்கள் ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ளன. இதனை அவதானித்து அடுத்து எழுதப்பட்ட சொல்லுக்குரிய பொருத்தமான இலக்கத்தை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

**கானம் - 123 கரம்-453 ஆயின் "கானகம்" என்னும் சொல்லுக்கு வருவது**


1) 1234

2) 1243

3) 2143


**22ஆம் 23 ஆம் வினாக்களில் வழங்கப்பட்டுள்ள உருக்களை அவதானித்து அடுத்து வரவேண்டிய உருவினைத் தெரிவு செய்க.**

23.



1) 2) 3)

24.



1) 2) 3)

25. ஒரு பாடசாலையில் நடைபெற்ற சிரமதான நிகழ்வு ஒழுங்கு மாறி அமைந்துள்ளது. இதனை ஒழுங்குபடுத்தி அமைக்கும்போது நடுவில் வரும் வாக்கியம்.

A. பாடசாலை சுத்தமாகக் காட்சியளித்தது.

B. எங்கள் பாடசாலையில் சிரமதானம் நடைபெற்றது

C. சிரமதானத்தில் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்

D. தலைமை ஆசிரியர் அனைவருக்கும் நன்றி கூறினார்

E. பெற்றோர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் சுற்றாடலைச் சுத்தம் செய்தனர்.

1) A

2) E

3) D

26. தரப்படும் நேர ஒழுங்குகள் ஒழுங்குமாறித் தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தி எழுதும் போது விடையாக அமைவது

A. மணித்தியாலம்

B. நிமிடம்

C. செக்கன்

D. நாள்

E. வாரம்

1) EADCB 2) CBADE 3) CABDE

27. குமரன் தனது வீட்டிலிருந்து தனது நண்பன் வீட்டை அடைவதற்கு 4Km நடக்க வேண்டும். நண்பன் வீட்டிலிருந்து மைதானத்திற்குச் செல்ல 8Km நடக்க வேண்டும். மணிக்கு 3Km வேகத்தில் நடக்கும் குமரன் மு.ப 8.30 ற்கு வீட்டிலிருந்து வெளிக்கிட்டு நண்பன் வீட்டினூடாக மைதானத்திற்கு நடந்து சென்றான் எனின், அவன் மைதானத்தை அடைந்த நேரம்

1) பி.ப 10.30

2) மு.ப 11.30

3) பி.ப 12.30


28. விமலன் கமலனிலும் உயரம் கூடியவன். கமலன் நிமலனிலும் உயரம் கூடியவன். அமலன் விமலனிலும் உயரம் கூடியவன். இவர்களுள் உயரம் கூடியவர் குறைந்தவர் முறையே

1) விமலன், அமலன்

2) அமலன், நிமலன்

3) கமலன், நிமலன்

29. இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை



1) 7

2) 8

3) 9

★ பின்வரும் 30ஆம் , 31ஆம் வினாக்களில் சொற்கூட்டத்தில் பொருத்தமற்ற ஒரு சொல் உள்ளது. அதன் கீழ்க் கோடிடுங்கள்

30. மா, அன்னாசி, வாழை, பலா

31. உடுக்கு, வயலின், தவில்

★ பின்வரும் 32ஆம், 33 ஆம் வினாக்களில் உள்ள 3 கூற்றுக்களில் ஒன்று பிழையானது. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

32. 1) குயில் கூடு கட்டியது
2) காகம் அடைகாத்து குஞ்சு பொரித்தது
3) குயிலுக்கு கூடு கட்டத் தெரியாது.

( .................. )

33. 1) அரிச்சந்திரன் சத்தியத்தைக் காத்தான்
2) ஔவையார் திருக்குறளை இயற்றினார்
3) பாரதியார் சிறந்த கவிஞர்

( .................. )

34. நோய்க்கு காரணம் அசுத்தம் எனில், விபத்துக்கு காரணம்

1) வாகனம்

2) இயந்திரம்

3) கவனயீனம்

35. "முரளி சிறுவயது முதலே எல்லோரிடமும் பணிவு, இரக்கம், உதவும் மனம் கொண்டவனாக விளங்கி வருகிறான். எனவே எதிர்காலத்தில் நல்லவனாக இருப்பான்" என ஆசிரியர் கூறினார். இக்கூற்றுக்குப் பொருத்தமான பழமொழி.

1) மனமுண்டானால் மார்க்கமுண்டு

2) விளையும் பயிரை முளையில் தெரியும்

3) புத்திமான் பலவான்.

36. சரணாலயம் என்பது,

1) விற்பனை செய்யும் இடம்

2) பாதுகாக்குமிடம்

3) காட்சிக்கு வைத்திருக்கும் இடம்

37. விவசாயி ஒருவன் 10 ஆடுகளும், 8 கோழிகளும் வளர்த்தான். ஆடுகளில் ஒன்றிற்கு 4 கால்கள் எனில் அங்குள்ள பிராணிகளின் மொத்தக் கால்களின் எண்ணிக்கை எத்தனை?

1) 56

2) 46

3) 55

38. கதிரை இரண்டில் அருகருகே இருவர் அமர்ந்துள்ளனர். அதில் ஒருவர் மற்றவரின் மாமி. மற்றவர் அவரின் மருமகன் அல்ல. அவ்வாறாயின் மற்றவருக்கும் அவருக்கும் உள்ள உறவு.

1) மருமகன்

2) மகள்

3) மருமகள்

★ பின்வரும் வாக்கியங்களை கருத்துள்ளவையாக திருந்திய மொழி நடையில் எழுதுங்கள்.


39. நேத்து நான் சோறு சாப்பிட்டன்

40. மாலதி தபால் கந்தோரிலை காசுக்கட்டளையை மாத்தினவள்.

## முக்கிய குறிப்பு

இவ்வினாப்பத்திரம் மாணவரால் சுயமாக பயிற்சி செய்து விடையளிக்கப்பட்டதென்பதை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அவ்வாறு அனுப்பி வைக்கப்படாத வினாப்பத்திரங்கள் எம்மால் நிராகரிக்கப்பட்டு பெறுபேறுகள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படமாட்டாது.

பொறுப்பாசிரியர்



# பரீட்சையில் தோல்வி என்றால்..!

2012 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த வியாழக்கிழமை (4 ஆம் திகதி) இரவு பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. இந்த பெறுபேறுகள் பலருக்கு சந்தோஷத்தையும், சிலருக்கு சங்கடத்தையும் தந்திருப்பதோடு, பல உயிர்ப்பலிகளுக்கும் காரணமாகியிருக்கிறது.

அதாவது தாம் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்காமல் போக தற்கொலைதான் முடிவென்று தன் கல்விக்கு மட்டுமல்லாது வாழ்க்கைக்கும் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் கடந்த சில வருடங்களாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான தற்கொலைகள் உயர்தரம் தொட்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையையும் விட்டு வைக்கவில்லை.

இந்நிலையில் கொஸ்கொட - ஏகல்ல பாடசாலையில் கல்வி பயின்ற சிறில் (17 வயது) என்ற மாணவன் கணித பாடத்தில் சித்தியடையத் தவறியமையினால் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார். இம்மாணவன் பாடசாலையைப் பொறுத்தவரையில் கணித பாடத்தில் வெகு திறமையான மாணவரென ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இதேபோன்று ஊரகஸ்மங்கந்திய இதுருவலவத்தை பகுதியைச் சேர்ந்த அநுராத விக்ரமரத்ன (16 வயது) க.பொ.த. சாதாரணதர பரீட்சை பெறுபேறு திருப்தியளிக்காததால் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவர்களின் எதிர்பார்ப்புகள் ஈடேறாத நிலையில் தங்களது வாழ்க்கையை முடித்துக் கொண்டுள்ளனர். இதற்கு இம்மாணவர்களை மாத்திரம் குறைகூறிவிட முடியாது. இவர்கள் சார்ந்த சமூகமே இவர்களை இந்நிலைக்குத் தள்ளியிருக்கிறது. பரீட்சையில் தோல்வியடைந்து போனவர்களை மேலும் தோல்வியடையச் செய்யும் வகையில் ஏளனமாகப் பேசி அவர்களது எதிர்காலத்தையே சூனியமாக்கி விடுகின்றனர்.

இது இவ்வாறு இருக்க வட்டவளை - ரொசல்ல பகுதியைச் சேர்ந்த தந்தையொருவர் தனது மகன் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாததைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

குடும்பத்தின் அத்திபாரமாக இருந்து அவர்களை வழிநடத்த வேண்டிய தந்தையே இவ்வாறு விரக்தியில் தற்கொலை செய்துகொண்டிருப்பதை நியாமாகக் கருத முடியாது.

இவ்வாறு பிரச்சினைகளுக்கெல்லாம் தற்கொலைதான் தீர்வென்றால் உலகமே இன்று வெறும் மயானமாகத்தான் இருந்திருக்கும். ஒரு முறை பரீட்சையில் தோல்வியடையும் பட்சத்தில் மீண்டும் ஒரு முறை முயற்சித்துப் பார்க்கலாம் அல்லது வேறு ஏதேனும் தொழில் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கற்றுக்கொள்ளலாம்.

இன்று எத்தனையோ விதமான பாட நெறிகள், தொழிற் கல்விகள் கற்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் தங்களது வாழ்க்கையைச் சரியான முறையில் நெறிப்படுத்திக் கொள்ள முடியும். இவை எல்லாவற்றையும் மீறி தற்கொலைதான் முடிவென்று நினைக்கும் இவர்களை என்னவென்று சொல்லுவது.

இவ்வுலகில் எதிர்நீச்சல் போடும் தைரியம் இல்லாதவர்களே இவ்வாறு தற்கொலையை ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். தற்கொலை ஒரு மனிதனின் அடிமட்ட கோழைத்தனத்தை எடுத்துக் காட்டுகிறது.

ஒவ்வொரு உயிரும் விலைமதிப்பற்றது. அதனை அத்தனை இலகுவில் ஈடுசெய்துவிட முடியாது. இந்த உயிர்களை யமனுக்கு தாரை வார்த்து விட்டு இவர்களின் குடும்பங்கள் படும் துன்பத்தினை வார்த்தைகளால் சொல்லிப் புரிய வைக்க முடியாது.

இவர்களைப் போன்று இன்னும் எத்தனையோ குடும்பங்கள் தொடர்ந்தும் துன்பத்தில் இருக்கின்றார்கள். பரீட்சையில் தோற்று விட்டால் அதை அவமானமாகக் கருதாதீர்கள். எல்லோருக்கும் ஏதோ ஒரு திறமை இருக்கும் அதன் மூலம் முன்னேறப் பழகிக் கொள்ளுங்கள்.

கால்களை இழந்தவர்கள், வாய் பேச முடியாதவர்கள், உடல் ரீதியான ஊனமுற்றவர்கள் எத்தனையோ பேர் இன்று சாதனையாளர்களாகத் திகழ்கின்றார்கள். நீங்கள் சாதனையாளர்களாக மாறவேண்டாம். கோழையாக சாகாமலாவது வாழலாம் தானே?

சசிகலா புஷ்பராஜா

# பிரிந்தோம்! சந்தித்தோம்!!

## இறம்பொடை புளூம்பீல்ட் தோட்டத்தில் நிகழ்ந்த ஒரு உணர்வுபூர்வ சம்பவம்!

தாய்க்கும் பிள்ளைக்குமான உறவு வெறும் தொப்புள் கொடி பந்தம் மட்டும் அல்ல. அந்த உறவும் பாசமும் வார்த்தைகளுக்குள் அடங்காதது. ஆனால், பெற்ற குழந்தைகளை வீதியில் வீசியெறியும் கல் மனம் படைத்த தாய்மாரும் இருக்கத்தான் செய்கிறார்கள். சிலர் வறுமை, நிர்ப்பந்தங்களால் மனதைக் கல்லாக்கிக் கொண்டு தாம் பெற்ற குழந்தைகளை வேறு எவருக்கும் கொடுத்தும் விடுகின்றனர்.

இவ்வாறு கொடுக்கப்பட்ட குழந்தையொன்று வளர்ந்து பெரியவளாகி 20 வருடங்களின் பின் தன் தாயைச் சந்தித்த உணர்ச்சிகரமான சம்பவம் ஒன்று அண்மையில் இறம்பொடைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.



**20 வருடங்களுக்கு முன்...!**

1993 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி இறம்பொடை புளூபீல்ட் தோட்டத்தில் வசிக்கும் மைனா லெச்சுமி என்ற தாய் நுவரெலியா பொது வைத்தியசாலையில் பெண் குழந்தையொன்றை பிரசவித்தார்.

அக் குழந்தை உலகைக் காணவந்த வேளை தந்தை இவ் உலகை விட்டு மீளமுடியாத இடத்திற்குச் சென்று விட்டார்.

கணவனை இழந்த மைனா லெச்சுமி அப்போது நிலவிய பொருளாதார சுமையினால் குழந்தையை தன்னால் வளர்த்தெடுக்க முடியாது என்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருந்தார் .

இந்நிலையில் சுற்றுலா வழிகாட்டியொருவரின் வேண்டுகோளுக்கிணங்க குழந்தை காஞ்சனாவை லண்டனைச் சேர்ந்த ஜோடியொன்றுக்கு தாரை வார்த்துக் கொடுத்தார். என்றாலும் தான் பெற்ற குழந்தைக்காக அவர் பணம் எதனையும் பெறவில்லை.

பிறந்து மூன்று வாரங்களிலேயே குழந்தை காஞ்சனா பெற்ற தாயைப் பிரிந்து தனது வளர்ப்பு பெற்றோரான ஜோனி றோயல், கிளில் றோயல் என்ற ஜோடியுடன் லண்டன் சென்றாள்.

பெற்றதாய், தந்தையோடு வாழக் கொடுத்து வைக்காவிட்டாலும் லண்டன் சென்ற காஞ்சனாவுக்கு வளர்ப்புப் பெற்றோர் எந்தக் குறையும் வைக்கவில்லை. காஞ்சனாவை அவர்கள் நன்றாக வளர்த்துடன் சிறந்த கல்வியையும் பெற்றுக்கொடுத்தனர்.

தற்போது காஞ்சனா 20 வயது யுவ்தியாக பொபி றோயல் என்ற பெயருடன் சட்டத்துறையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கிறார்.

சரியான பருவம் வந்ததும் பொபி றோயல் இலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டு வளர்க்கப்பட்டவள் என்பதை அவளது வளர்ப்பு பெற்றோரான லண்டன் ஜோடிகளே அவளிடம் தெரிவித்தனர்.

இதனை அறிந்துகொண்ட நிமிடத்திலிருந்து பொபி றோயலின் எண்ணமெல்லாம் எப்படியாவது தன்னை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்திய தாயை பார்த்தேயாக வேண்டும் என்பதாக இருந்தது.

இதற்காக பொபி றோயலுக்கு லண்டனிலுள்ள தனது நண்பர்களின் உதவி நிறையவே கிடைத்துள்ளது. இதனையடுத்து தனது தாயைக் கண்டுபிடிக்கும் நோக்கில் 20 வருடங்களுக்குப் பிறகு கடந்த மாதம் 26 ஆம் திகதி இலங்கை வந்தார் பொபி றோயல்.

**லண்டனுக்கு தத்துக் கொடுக்கப்பட்ட குழந்தை 20 வருடங்களின் பின் தாயைச் சந்தித்த தருணம்!**

நீர்கொழும்பு பகுதியிலுள்ள சுற்றுலா ஹோட்டலொன்றில் தங்கி தாயைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட பொபி றோயலுக்கு ஹோட்டல் முகாமையாளரும் தன்னாலான உதவிகளைச் செய்துள்ளார்.

இவர்களோடு அட்டன் மற்றும் கொட்டகலை பகுதிகளைச் சேர்ந்த சுமதி, சசிகுமார் ஆகியோரும் பொபி றோயலுக்கு உதவியுள்ளனர்.

இவர்கள் அனைவரினதும் உதவியுடன் நீண்ட தேடலுக்குப் பின் கடந்த முதலாம் திகதி பொபி றோயல் இறம்பொடை புளூபீல்ட் தோட்டத்திற்குச் சென்றார்.

20 வருடங்களுக்குப் பின் பொபி றோயல் தனது பெற்ற தாயான 64 வயதுடைய மைனா லெச்சுமியை சந்தித்தார்.

புளூபீல்ட் தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்பில் வசிக்கும் தாயை அவர் சந்தித்த உணர்வுபூர்வமான நிகழ்வு வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

பொபி றோயல் மற்றும் அவருடன் சென்றவர்கள் தாய் லெச்சுமி சமைத்த உணவுகளையும் உண்பதற்கு மறுக்கவில்லை. விடயம் அறிந்து லெச்சுமியின் வீட்டைச் சூழ்ந்த தோட்ட மக்கள் பொபி றோயலுடன் சினேகமாகப் பழகினர்.

தற்போது பொபி றோயலின் ஒரே எதிர்பார்ப்பு விருப்பம் எல்லாம் தனது தாயை நன்றாக பராமரிப்பதுதான்.

20 வருடங்களின் பின் பெற்ற மகளை சந்தித்த தாய் மைனா லெச்சுமி தெரிவிக்கையில்;

எனது பிள்ளை பிறந்து மூன்று வாரங்களிலேயே அவளை வெளிநாட்டு ஜோடியொன்றுக்கு கொடுத்துவிட்டேன். மிகவும் வேதனையுடனேயே அவளை அவர்களுக்கு கொடுத்தேன். ஆனால், இன்று இவளின் வளர்ச்சியைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

இவள் தற்போது சட்டத்தரணியாக வருவதற்கு கற்றுக்கொண்டிருக்கிறாள். இங்கிருந்திருந்தால் தோட்டத்தில் கொழுந்து பறித்துக்கொண்டு துன்பகரமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்திருப்பாள் எனத் தெரிவித்தார்.

பொபி றோயல் இலங்கைக்கு வருவதற்கு மூன்று வாரங்களுக்கு முன்னரே பொபி றோயலை லெச்சுமியிடமிருந்து பெற்றபோது எடுத்த புகைப்படமொன்றையும் கொடுத்துள்ளனர்.

இதனை வைத்துக் கொண்டே பொபி றோயல் தனது தாயை தேடிக் கண்டுபிடித்துள்ளார். பெற்ற தாயைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட பொபி றோயலுக்கு வளர்ப்புப் பெற்றோர் உண்மையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது

**(நன்றி லங்காதீப) மேகலா ரமேஷ்**

# வாத்து பறக்குமா?

பறவையாக இருந்தபோதும் வாத்தால் பறக்கமுடியாது என்று நாம் அறிவோம். ஆனால் நானுஓயா டெஸ்போட் தோட்டத்தில் பறக்கும் வாத்து அதிசயத்தை ஏற்படுத்துகிறது. டெஸ்போட் கீழ்பிரிவில் வசித்துவரும் மகேந்திரன் ஒரு தோட்டத் தொழிலாளி. இவர் இரண்டு வாத்துக்களை வளர்த்து வந்தார். ஒன்று ஆண் மற்றது பெண்.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் பெண் வாத்து வீட்டிலிருந்து பறந்து செல்லத் தொடங்கிவிட்டது. பறந்து செல்லும் வாத்தை அதன் வேகத்திற்கு சென்று பிடித்துக் கொள்ள முடியவில்லை. பறந்து சென்ற வாத்தை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் தேடியும் கிடைக்கவில்லை. நான்காவது நாள் ஐந்து கிலோ மீற்றர் தூரத்திலிருந்த ஒரு மரத்தில் இருப்பது வாத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி இவ்வாத்தின் உரிமையாளர் கூறுகையில் நான் நீண்ட காலமாக வாத்துக்களை வளர்க்கின்றேன். எனினும் ஒரு நாள் கூட வாத்து பறந்ததில்லை. இவ்வாறு வாத்து பறந்தது இதுவே முதல் தடவை. எனக்கு மிகவும் ஆச்சரியமாகவுள்ளது எனக் கூறினார்.


டி.சந்ரு,நானுஓயா





















# பாம்பாக வந்த அம்மன்

**வ**வுனியா ஓமந்தை வண்ணாங்குளத்தில் 800 வருடங்கள் பழைமை வாய்ந்த கண்ணகை அம்மன் ஆலயம் காணப்படுகின்றது. வயலும் காடும் சார்ந்த பிரதேசமாகக் காணப்படும் இப் பகுதியில் காணப்படுகின்ற பழைமை வாய்ந்த ஆலயம் இதுவாகும். பேச்சியம்மன், மகாமாரியம்மன், காத்தவராயர் போன்ற கிராமியத் தெய்வங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இவ் ஆலயம் அமைந்திருக்கின்றது.

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற கூற்றுக்கிணங்க தமிழ், இந்து மக்கள் வாழுகின்ற எந்தவொரு பகுதியிலும் ஆலயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வாறு தோற்றம் பெற்ற ஆலயங்களில் ஓமந்தை அரசர்பதி கண்ணகை அம்மன் வரலாறு தனிச்சிறப்பானது என ஊர் மக்கள் கூறுகின்றனர்.


தேனும் சுண்ணாம்பும் கொண்டதாக அமைக்கப்பட்ட இவ் ஆலயத்தின் புராதன மூலஸ்தானம் யாரால்? எப்போது? அமைக்கப்பட்டது என்று யாருக்கும் தெரியாதபோதும் புராதன கால மன்னர்களால் இவ்வாலயம் பயன்படுத்தப்பட்டமைக்கான தொல் பொருட்சான்றுகள் கிடைத்துள்ளன. வற்றாப்பளை அம்மன் அங்கிருந்து வந்தபோது குடிகொண்ட ஆலயமாகவே இவ் ஆலயம் கருதப்படுகின்றது. இது தொடர்பாக ஆலய நிர்வாக சபையைச் சேர்ந்த கந்தையா அமிர்தலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்;

எங்கட அரசர்பதி கண்ணகை அம்மன் ஆலயம் 800 வருடங்களுக்கு மேல் பழைமையானது. வற்றாப்பளை கண்ணகை அம்மன் அங்கிருந்து இங்க வந்து இருந்ததாக வரலாறுகள் சொல்கின்றன. இந்தக் கோயில் இருக்கிறதால இந்த ஊருக்கு எந்த கெடுதலும் ஏற்படுவதேயில்ல என்றார்.

இவ் ஆலயத்தில் ஆகம முறைசாராது கிராமிய முறைப்படியிலான பூசை வழிபாடுகளே இடம்பெறுகின்றன. இதனை



அரசர் வேலுப்பிள்ளை என்பவரே பராமரித்து பூசை செய்து வந்தார். அவரின் பின் அவரது சகோதரர்கள், பிள்ளைகள் போன்றோரால் பராமரிக்கப்படுவதால் அவர்களுடைய பட்டப் பெயரைக் கொண்டு அரசர்பதி கண்ணகை அம்மன் என இவ்வாலயம் அழைக்கப்படுகின்றது. இவ் ஊரின் எழிச்சிக்குக் காரணமாக இருந்த இவ் அம்மன் ஆலயத்தின் பழைமையான அமைப்பு தற்போது மாற்றப்பட்டு புதிய தோற்றத்துடன் பொற்கோயிலாக அமைக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பாக இவ் ஆலயத்தின் தர்மகர்த்தா அரசர் வேலுப்பிள்ளை குணரட்ணம் என்பவர் கூறுகையில்;

நாங்கதான் பரம்பரை பரம்பரையாக இந்தக் கோயிலை பராமரித்து வருகிறோம். நாஸ்திகனாக இருந்த நான் இப்போது அம்மனோட தீவிர பக்தனாக இருக்கிறன்.

ஒரு நாள் வீட்டு மண் கும்பில இருக்கும் போது பாம்பு ஒன்று முன்னால வந்தது. நான் பெரிய தடி எடுத்து அடிக்க பாம்பு மாயமாய் போயிட்டுது. பிறகு பார்க்கும்போது மரத்தில இருந்திச்சு. பிறகு திரும்பி எனக்கு முன்னால கும்பிக்கு வந்திச்சு. அடிக்க திருப்பி மரத்தில இருந்திச்சு. அன்று மணித்தியாலக்கணக்காய் பாம்போட போராடிக் கொண்டிருந்தேன். அம்மா வந்து "அது கோயில் பாம்பு வா" என அழைத்துக் கொண்டு போட்டா. அதுக்கு பிறகு கோயிலையோ, ஊருலையோ ஏதாவது பிரச்சினை என்றா பாம்பு வரும். அதற்கு பிறகு தான் எனக்கு கடவுள் நம்பிக்கை வந்தது என்றார்.

அதுமட்டுமல்ல இந்தப் பாம்பை அடித்த காரணத்தால எனக்கு 10 வருஷமாக பிள்ளைப் பாக்கியம் இல்லை. இந்த அம்மனுக்கு பரிகாரம் செய்துதான் பிள்ளை பிறந்தது. இப்படி எங்கட அம்மன் அதிசயங்கள் பல நிகழ்த்தினவா என்றார்.

குடும்பம் ஒன்றில் பிள்ளைச் செல்வமே பெரும் செல்வம். இச்செல்வத்தை பெற்ற மகிழ்வுடன் இப்பொழுது இவ்வாலயத்தை முற்று முழுதாக மாற்றி ஒரு பொற்கோயிலாக அமைத்துள்ளார் அரசர் குணரட்னம்.


இந்தியாவில் இருந்து நாற்பதுக்கும் மேற்பட்ட சிற்பக் கலைஞர்கள் வரவழைக்கப்பட்டு அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடியதாக பஞ்சதல இராஜகோபுரத்துடன் கூடியதாக இவ் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் கும்பாபிஷேக் விழாக்காணும் இவ்வாலயம் தற்போது இலங்கை வரலாற்றில் சிறந்த பொற்கோயில் என்ற பெருமையை பெறுவதுடன், இலங்கையின் பிரதான தளமாகவும் எழுச்சி பெற்றுள்ளது. எனவே, சைவமும் தமிழும் மெல்ல மெல்ல அழிவடைந்து செல்லும் இந்நாட்டில் அரசர்பதி ஸ்ரீ கண்ணகை அம்மன் பொற்கோயில் இந் நாட்டு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

**கே.வாசு**








## சீராகுமா...
## சித்திரை கடந்தாவது!

அரக்கர் ஒழிந்து
அரசாட்சி கடந்து
அடுத்த பிரபஞ்சம்
அடுத்த பிறப்பும்
அடைகையிலே....!
மாறுமோ...
மலையகம்? - கேள்வி கேட்ட
மனங்கள் மாறி....
மது சிறை மீட்க
மானிடர் வருவாரோ?
மன்றாடும்...
மங்கையர் கூட்டம்
மடங்காகிறது-ஆயிரங்களில்!

சித்திரங்களாய் பேசுகிறது
பத்திரிகைகளில் - எங்கள்
சரித்திரங்கள் மட்டும்!
தரித்திரமாய் - எம்மை-நினைப்போர்
தவம் கிடந்தும் மாறவில்லை!
தலை ஆடுபவரும்; இங்கே
வால் ஆட்டுபவரும்!
உதவிகளும் எங்கள்
உரிமைகளும்...
ஊர்ந்த வண்ணம்
இன்னும் - இங்கே!
பதவிகளோ....
பரம்பரைக்கும்
பறக்கிறது அங்கே!
மது போதை...
மயக்கம் போக்க
மருந்து வருமா...
மறக்க மானுடர் வழியே!
ஆடுபவரும் - ஆட்டுபவரும்
ஆட்கள் அற்று
அல்லாடுவாரோ....
அடுத்த -வருட-பிறப்பில்!
அகவைகள்
அறுபத்தைந்து கடந்துவிட்ட
சுதந்திரம் இங்கே...
சுமாராக கிடைத்தது -மறந்து
சரிக்கு -சமமாக மாறுமா?
சரிநிகர் நாமாக...
சீராகுமா....
சித்திரை கடந்தாவது!



க.தர்ஷன்,
ஹொப்டன்.

## ஓடாதே மகனே ஓடாதே!

ஓடாதே மகனே ஓடாதே...
உனக்குப் போல்தான்
எனக்கும் கசப்பாய் இருந்தது
கல்வி அன்று

பள்ளிக்கூடம்
போகச்சொன்னால்
தற்கொலைத் தாக்குதலில்
சிக்கிச் சிதறும் உடம்புபோல்
உணர்வு இருக்கும்!

இன்று
இதயம் அழுகுதடா
கண்கள் கண்ணீர் கக்குதடா
கல்வியின் மேன்மை புரியுதடா
கற்றுக்கொள்ளத்துடிக்குதடா...
கற்க முடிந்தாலும்
கறுப்பின் எதிர் வெண்மையடா
வெண்மை சுமக்க மேனி துடிக்குதடா
பருவம் அதை தடுக்குதடா
பள்ளிப்பருவத்தில் கிடைக்கும்
பிரசாதமடா அது
ஓடாதே மகனே ஓடாதே
வெள்ளை ஆடை
அணிந்து கொள்ளடா
பள்ளிக்கூடம் செல்லடா
நல்பாடம் கற்றுக்கொள்ளடா!



அன்றெனக்கு
பத்து சதம் கிடைத்தால்
பரவசம் அடைந்தேனடா
கூலி செய்தேனும்
குரங்கு மனதை திருப்திப்படுத்தினேடா!

அதன் தாக்கமடா
இன்றைய ஏக்கம் எனக்கு
அதை நீக்கவே -உனக்கு
அன்பு உபதேசமடா மகனே!

கடன் வாங்க முடியாதடா
கல்விச்செல்வத்தை
காசு இருக்குதடா இன்று
கல்வியின் முன் தூசுடா மகனே தூசு!



உணர்ந்தேனடா
உண்மை இன்று
உணர்த்துகிறேனடா உனக்கு அதை
ஓடாதேடா மகனே ஓடாதே!
உன் தந்தை சொல் உதறாதே...
கற்றுக்கொள்
கண் திறக்கும்
பெற்றுச்செல்
பெறுமதியான பெக்கிஷத்தை!

ஏ.பாரிஸ், மிகிந்தலை.

## உன்னால் தானே!

அன்பிற்கினிய அழகிய வார்த்தைகளால்
அறிவுரை கூறி வளர்த்தாய்
பிரிவுகள் ஏராளம்
கவலைகளோ என் மனதில் தாராளம்
உன்னால்தானே!
காற்றுடன் கலந்த தூசிபோல்
காதலுடன் கலந்த உன் நினைவுகள்
காலம்பூராகவும் கனவென்றுபராமல்
என்னை வாட்டுகின்றது.
உன்னால் தானே!

எஸ்.நி.ஃமத்துல்லாஹ்,
பொத்துவில்.








## நிலா

நீயும்
அவளும்
இரட்டைப்
பிறவிகளோ?

## மேகம்

உன்னை
எழுத மறுத்த
வேதனையில்
கறுத்துப் போன
வெள்ளைத்தாள்

## வானவில்

தொலைதூரத்தில்
இருந்து
உன்னை
தொட ஏங்கும்
வண்ணச்சோலை

க.நினல்ராஜன், லெதண்டி.

## காதல் பலவிதம்



கடற் கரைக் காதல்
கல்லூரிக் காதல்
கள்ளக் காதல்
கையடக்கத் தொலை பேசிக் காதல்
கரை காணா காதல்
தெய்வீகக் காதல்
தியாகக் காதல்
போலிக் காதல்
லையிலா, மஜ்னு காதல்
ரோமியோ ஜூலியட் காதல்
ஷாஜகான், மும்தாஜ் காதல்
அம்பிகாபதி, அமராவதி காதல்
சரித்திரக் காதல்
இலக்கியக் காதல்
இதயம் கவர்ந்த காதல்
தற்கொலைக் காதல்
தட்டு தடையின்றி
மறு உலகம் அனுப்பிடும் காதல்

ஆர்.பி.எஸ்.மணியம், கொட்டகலை.

## மெழுகுவர்த்தி

நிச்சயமற்ற வாழ்க்கையில்
நிச்சயமான இறுதிப்
பயணமே என் மரணம்
கசந்த வாழ்வு
இனித்திடுமோ?
பலருக்காக கண்ணீர்
விட்டழுகின்றேன்
கடந்த வாழ்க்கையை
எண்ணி ஏங்குகிறேன்
கடவுளைக் கண்டால் நான்
கண்ணீர் விட்டு மன்றாடி
வேண்டுவதோ
காசோ, பணமோ இல்லை
மக்களுக்காக உருகி
உயிரைவிடும்
வாழ்வே போதும்
பிறரை அழவைப்பதில்
எனக்கு மகிழ்வு
இல்லை - ஆனால்
நான் அழுது பிறரை
வெளிச்சத்தில்
அமர்த்துவதில் தான்
எனக்கு மகிழ்வு.

ரா.ரவீணா, நமுனுகுல.

## ஏமாற்றம்

ஓரிரு நாள் உன்னை நினைத்து
கண் விழித்தேன்
உயிரே; என் விழிகள் கூட
மூட மறுக்கிறது.
உன் நினைவை இழந்து விடக்
கூடாது என்று!
வெறுக்க நினைக்காதே
உன் கோபம் கூட
உன்னையே காதலிக்கின்றன.

வி.காயத்ரி, வெலிமடை.

## சித்திரையே!

பிறை ஒளியில்
பிறந்துவிட்ட
பெருமகளாம்!
குறைதீர்க்க
வந்துதித்த
குலமகளாம்
தித்திக்க பாட்டிசைக்க
திருமகளாம்
திசை எட்டும்
பிறந்து விட்டாளாம்
செல்வத்
திருமகளாம்
சித்திரையே...!

எம்.யூ.அல்சாத்,
ஓட்டமாவடி.

## மரணம்

மனிதனே கேள்!...
மரணம் என்பது
முற்றுப்புள்ளியல்ல
அதுவோர்
அரைப்புள்ளியாய்
தொடரும் வாழ்க்கை!
உலக வாழ்வின்
நிறைவை
எழுதித்தரும்
பரீட்சையாய்;
விடையின்
நிறைவை
காண தொடரும்
பயணம்!....

எம்.யூ.அல்சாத்,
ஓட்டமாவடி.

க
வி
தை
க
ள்

உதய சூரியன் "கவிதைச்சமர்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:------------------------
முகவரி:------------------------
தொலைபேசி இல------------------



# நினைத்ததை முடிப்பவன்! 43

பாலா.சங்குப்பிள்ளை

வில்லவன் ஓட்டோவில் ஏறி வேகமாக சென்றான். அவன் மனதில் பல்வேறு எண்ணங்கள் ஓடின. கண்ணுசாமி வரும் தேர்தலில் எப்படியாவது வெற்றிபெற்று மறுபடியும் பாராளுமன்ற உறுப்பினராகிவிட வேண்டுமென்ற நோக்கில் பல்வேறு வகையில் முயற்சிகளை மேற்கொண்டான். கடைசியாக வில்லவனுக்குக் கிடைத்த செய்தியின்படி கண்ணுசாமி முத்துராமனின் அரசியல் எதிரியான வைத்தியலிங்கத்துடன் கூட்டு சேர்ந்துவிட்டானாம். இதில் ஆச்சரியப்பட வேண்டிய விடயம் வைத்தியலிங்கத்தின் மகள் மைதிலியை ஏமாற்றி நாசப்படுத்தியவன் இதே கண்ணுசாமிதான்.

பத்திரிகைகளில் அன்று பரபரப்பாக பேசப்பட்ட இவ்விடயத்தை தன் அதிகாரத்தின் மூலம் அப்படியே அமுக்கிவிட்டான் கண்ணுசாமி. அப்படிப்பட்டவன் இப்போது அதே வைத்தியலிங்கத்துடன் கூட்டு சேர்ந்துவிட்டான். பட்டம், பதவிக்காக சாக்கடையில் விழுந்து புரளவும் தயாராகவுள்ள இப்படியான அரசியல்வாதிகளினால்தான் மலையக அரசியல் நாற்றமடிக்கத் தொடங்கியுள்ளது. இவர்களின் அட்ட காசத்தினை அடக்காவிட்டால் ஆபத்து மலையக மக்க ளுக்குத்தான். அதெல்லாம் போகட்டும் முத்துராமனின் மகன் வேலவன் எதற்காக வில்லவனை அவசர அவசரமாக வரச்சொன்னான். பொதுவாக வேலவன் அவனுடன் அவ்வளவாக பேசமாட்டான். எப்போதாவது எங்கேயாவது கண்டால் இலேசாக புன்னகைப்பான். ஆனால், இப்போது அவசரமாக பேசவேண்டும். யாருக்கும் சொல்லாமல் தெரியாமல் ஹோட்டல் மஹாலட்சுமிக்கு வரச்சொல்லியிருந்தான். எதற்காக, ஏன் அழைக்கிறா னென்று தெரியாமல் அவனைக் காண விரைந்தான் வில்லவன். அவன் ஹோட்டலை அடைந்தான். இலக்கம் 12 ஆவது அறையை அடைந்தான். கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டது. உள்ளே நுழைந்தான். உள்ளே வேலவன் தனியாக கட்டிலில் அமர்ந்திருந்தான். அவன் முகம் வாட்டமுற்றிருந்தது.

“வாங்க வில்லவன் உங்ககிட்ட சில விஷயங்களை மனம்விட்டுப் பேச வேண்டியிருக்கு. அதுதான் வரச் சொன்னேன்....”

“சொல்லுங்க வேலவன்... என்ன விஷயம்?”

“நான் நல்ல வசதியோடத் தான் பிறந்தேன். ஆனா எனக்கு இந்த பகட்டான வாழ்க்கை பிடிக்கல்லை. அதுவும் இந்த அராஜக அரசியல் பிடிக்கல்லை. உழைப்பவனை சுரண்டி சுகபோகமா வாழக்கூடிய ஊளுத்துப்போன அரசியல் சுத்தமா பிடிக்கல்லை... அதனால்தான் தனியா ஒதுங்கிட்டேன். அப்பாவோட பாவப்பட்ட பணத்தை நான் தொடலை. என் வாழ்வில் வசந்தமா வந்த மஞ்சுளாவை நான் உயிரா நினைச்சேன். கடைசியில அவளும் உயிரை விட்டுட்டா. இதுக்கு யார் காரணம்னு பொலிஸ் விசாரிச்சிக்கிட்டிருக்குது. ஆனால், நான் ஒருத்தரை சந்தேகப்படுறேன். சந்தேகத்தை நிவர்த்திசெய்ய ஆதாரங்களைத் தேடினேன். சிக்கின சில ஆதாரங்களால சித்தம் கலங்கிப் போயிருக்கேன். ஏன்னா நான் எதிர்பார்க்காத ஒருத்தர் இதுல சம்பந்தப்பட்டிருக்காரு. இன்னும் ரெண்டொரு நாள்ல நான் எல்லா உண்மைகளையும் ஆதாரத்தோட கண்டுபிடிச் சிடுவேன். இதுல என்ன சிக்கல்ன்னா இதைத் தோண்டப் போய் எதிர்பாராத வேற குப்பைகளும் வெளி வரப் போகுது. உங்களை நான் அழைச்சதுக் குக் காரணம் உங்களை மாதிரி ஒரு இளைஞர் கூட்டம் அரசியலுக்கு வரணும். தன்னலமற்ற சேவையை வழங்கணும். உழைக்கும் வர்க்கத்துக்கு சேரவேண்டிய சலுகைகள், உரிமைகள் சரியா கிடைக்கிறதுக்கு உங்களை மாதிரியானவங்கதான் உறுதுணையாயிருக்கணும். அதுக்கு முன்னோடியா நான் ஒரு முக்கியமான வேலையை துணிஞ்சி செய்யப்போறேன். இது தவிர்க்க முடியாததாக இருந்தாலும் இதுதான் தர்மம். இதுதான் நியாயம்.....”

வில்லவன் பிரமிப்புடன் அவனைப் பார்த்தான். “நீங்க பேசுறதைப் பார்த்தா ஏதோ ஒரு பெரிய காரியத்தை செய்யிறமாதிரி இருக்கு. பசு பாம்பா மாறிடுறது மாதிரி பாவத்தை கழுவ பெரிய திட்டம் ஒண்ணு போட்டிருக்கிறது மாதிரி இருக்குது. எதுவாயிருந்தாலும் நீங்க சொல்லுற சகலதுக்கும் நிச்சயமா நான் கட்டுப்படுவேன்....”

“ரொம்ப சந்தோஷம் வில்லவன். இன்னைக்கு செவ்வாய்க்கிழமை. வர்ற வியாழக்கிழமை நிறைஞ்ச பௌர்ணமி. அன்றைக்கு சரியா இராத்திரி ஒன்பது மணிக்கு என்னோட வீட் டுக்கு வரணும். நினைத்ததை முடிப்பவனோட இலட்சியம் நிறைவேறப்போற அன்றைக்கு நாம கட்டாயமா சந்திக்க வேண்டிய கட்டாயத்தில இருக்கோம்....”

“நினைத்ததை முடிப்பவர் அன்னைக்கு நேர்ல நம் முன்னால தோன்றப் போறாரா....?”

“ஆமா..... நிச்சயமா.... தோன்றப் போறார். அதோட இனி அந்த பொறுப்பையும் வேறொருத்தருக்கு குடுக்கப் போறார். ஏன்னா.... எல்லோருமே இதுல கட்டாயமா பங்குகொள்ளணுமாம்.....”

“ஓகே.... வேலவன். நான் புறப்படுறேன். எனக்கும் முடிக்க வேண்டிய முக்கிய வேலை கொஞ்சம் இருக்கு.... என்னதானிருந்தாலும் எத்தர்களிருக்கும் இந்த அரசியல் சாக்கடையில் சில நல்லவர்களும் இல்லாமலில்லை. அவர்களுக்குக் கைகொடுத்துக் காப்பாற்ற வேண்டிய கடமையும், கடப்பாடும் எனக்கு இருக்குது. வியாழக்கிழமை உங்களை சந்திக்கும்போது நானும் சில அதிர்ச்சியான தகவல்களுடன் நிச்சயமாக உங்களைச் சந்திப்பேன்....”

அவன் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தான். பஸ் தரிப்பிடம் நோக்கி நடந்தான். இரண்டடி தூரம்விட்டு ஒருவன் அவனைப் பின் தொடர்ந்தான்.

(தொடரும்......)

## பெர்னாட்ஷாவின் பதில்

பெர்னாட் ஷாவைப் பார்த்து அவருடைய நண்பர் ஒருவர் இடக்கு மடக்காகப் பேசினார். பெர்னாட்ஷா திடீரென உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று வைத்துக் கொள்வோம். அப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று கேட்டார். அதற்கு பெர்னாட்ஷா கடவுளுக்கு நன்றி சொல்வேன் என்றார். இதைக் கேட்ட அவரது நண்பர் சற்று குழப்பம டைந்து என்னது கடவுளுக்கு நன்றியா? ஏன் அப்படி? எனக் கேட்டார். அதற்கு பெர்னாட்ஷா பைத்தியக்காரத்தனமாகக் கேள்விகள் கேட்கும் உங்களைப் போன்றவர் என்னை நெருங்கப் பயப்படுவார்கள் அல்லவா? என்று குறும்பாக பதில் சொன்னார். கேள்வி கேட்ட நண்பரின் முகத்தில் அசடு வழிந்தது.

# சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!

01. சாந்தினிதேவி சந்திரசேகரன் - தலைவர், மலையக மக்கள் முன்னணி / மலையக தொழிலாளர் முன்னணி

02. வி. எஸ். இராதாகிருஸ்ணன் - பாராளுமன்ற உறுப்பினர், அரசியற்துறை தலைவர் மலையக மக்கள் முன்னணி

03. ஏ. லோரன்ஸ், செயலாளர் நாயகம் - மலையக மக்கள் முன்னணி

04. கே. சுப்பிரமணியம், பொது செயலாளர் - மலையக தொழிலாளர் முன்னணி

05. அ. அரவிந்குமார் - ஊவா மாகாண சபை உறுப்பினர், நிதிச்செயலாளர் - மலையக மக்கள் முன்னணி / மலையக தொழிலாளர் முன்னணி

06. சரத் அத்துகோரல, சிரேஷ்ட உபதலைவர் - மலையக மக்கள் முன்னணி

07. எஸ். ஜெயபாரதி, உபதலைவர் - மலையக மக்கள் முன்னணி

08. பி. எஸ் கிருஷ்ணன், நிருவாக செயலாளர் - மலையக தொழிலாளர் முன்னணி

09. எஸ். விஜயசந்திரன், பிரதி செயலாளர் நாயகம் - மலையக மக்கள் முன்னணி

10. என். சதாசிவன், உபதலைவர் - மலையக மக்கள் முன்னணி தலைவர், நுவரெலிய பிரதேச சபை

11. ஆர். கனகரட்ணம், உபதலைவர் - மலையக மக்கள் முன்னணி உள்ளிட்ட பிரதேச சபை உறுப்பினர்கள், மத்திய குழு உறுப்பினர்கள், உத்தியோகஸ்தர்கள், அமைப்பாளர்கள், மாவட்ட மற்றும் தோட்ட கமிட்டி தலைவர்கள்.






# வருடப்பிறப்பு கரும அனுஷ்டானங்கள்

## விஜய வருஷ வருடப் பிறப்பு

விஜய வருடம் பங்குனி 31 ஆம் திகதி (13-04-2013) சனிக்கிழமை முன்னிரவு நாடி 44 விநாடி 14 (மணி 11.58) இல் பூர்வபக்க சதுர்த்தித் திதியில் கார்த்திகை நட்சத்திரத்தின் நான்காம் பாதத்தில் ஆயுஷ்மான் நாமயோகத்தில், வணிசக் கரணத்தில், தனு லக்கினத்தில், கன்னி நவாம்சத்தில் இப்புதிய விஜய வருஷம் பிறக்கின்றது.

**புண்ணிய காலம்**

அன்று முன்னிரவு நாடி 34 விநாடி41 (மணி 7.58) முதல் அன்று பின்னிரவு நாடி 54 விநாடி 41 (மணி 3.58) வரை விஷு புண்ணிய காலமாகும்.

**ஸ்நான முறை**

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் புங்கமிலையும், காலில் ஆலமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

### ஆதாய விரய பலன்

| ராசி | ஆதாய | விரய | பலன் |
|---|---|---|---|
| மேடம் | 11 | 5 | அதிக இலாபம் |
| இடபம் | 5 | 14 | பெரு நஷ்டம் |
| மிதுனம் | 8 | 11 | நஷ்டம் |
| கடகம் | 8 | 2 | இலாபம் |
| சிங்கம் | 5 | 5 | சமம் |
| கன்னி | 8 | 11 | நஷ்டம் |
| துலாம் | 5 | 14 | பெரு நஷ்டம் |
| விருச்சிகம் | 11 | 5 | அதிக இலாபம் |
| துனுசு | 14 | 11 | இலாபம் |
| மகரம் | 2 | 8 | நஷ்டம் |
| கும்பம் | 2 | 8 | நஷ்டம் |
| மீனம் | 14 | 11 | இலாபம் |

**ஆடைகள்**

மஞ்சள், நீல நிறமுள்ள பட்டாடையாயினும், மஞ்சள்கரை, நீலக்கரை அமைந்த புதிய பட்டாடையாயினும் அணிய வேண்டும்.

**ஆபரணம்**

புஷ்பராகம், நீலக்கல் இழைத்த ஆபரணம் அணிய வேண்டும்.

**உண்டிகள்**

அறுசுவை அமைந்த உண்டிகளுடன் வேப்பம்பூ, பிட்டு என்பவை சேர்த்திருத்தல் வேண்டும்.


**தோஷ நட்சத்திரங்கள்**

கார்த்திகை,ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் கால்கள், உத்தரம், சித்திரை 3, 4 ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து தானதரும வழிபாடு செய்து சங்கிரமதோஷ நிவர்த்தி செய்யக்கடவர்.

**கைவிசேஷ நேரங்கள்**

**14-04-2013.** மு.ப. 8.11-மு.ப.9.52
மு.ப.10.04- பி.ப.12.03
பி.ப.12.15- பி.ப.2.10
பி.ப.2.22- பி.ப.4.11
பி.ப.8.25 - பி.ப.9.04

**15-04-2013.** மு.ப.9.14- மு.ப.9.48
மு.ப.10.09- மு.ப.11.58
பி.ப.06.47- பி.ப.7.48




எத்தனை தடவ Reject பண்ணாலும் அந்த பையன் திரும்பத் திரும்ப Friend Request அனுப் புறான்...!

ராஜா : கடவுளே எனக்கு ஒரு வீடு நிறைய தங்கம் கொடு

சீதா : எனக்கு ஒரு வீடு நிறைய வைரம் கொடு.

ரவி : எனக்கு அந்த ரெண்டு வீடுகளோட சாவியைக்கொடு

## இப்படி யோசிங்க...!




# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க

ஒரு கணவனும் மனைவியும் வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு குரங்கு வீதியைக் கடந்து அந்தப் பக்கம் போயிற்று.

**அதைப் பார்த்து மனைவி சொன்னாள்:**
என்னங்க உங்க சொந்தக்காரங்க யாரோ போயிட்டு இருக்காங்க, நீங்க பார்க்கலையா?

**உடனே கணவன் சொன்னான்:**
அட! நான் பார்க்காம இருப்பேனா? என்னோட மாமனாரை எனக்குத் தெரியாதா என்ன? அவர் ஏதோ அவசர வேலையாய் போறார்ன்னுதான் நான் கூப்பிடலை.






## தண்ணீர் வாங்கிட்டு வாங்க...!

வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்த ஒருவர் திடீரென்று வெயில் கொடுமை தாளாமல் மயங்கிக் கீழே விழுந்து விட்டார்.

அவரைச் சுற்றி பெருங்கூட்டம் சூழ்ந்து நின்றது.

"பாவம், மயக்கம் போலிருக்கு! யாராவது ஓடிப்போய் கொஞ்சம் தண்ணீர் வாங்கிட்டு வாங்களேன்!" என்றார் ஒருவர்.

"ஆமாம், தண்ணீரை அவரு வாயில ஊத்தினா மயக்கம் தெளிஞ்சிடும்!" என்றார் வேறொருவர்.

ஆளுக்கு ஆள், மயங்கிக் கிடந்தவரைப் பார்த்து பரிதாபப்பட்டு பேசிக்கொண்டு நின்றிருந்தார்களே தவிர, யாரும் கொஞ்சம் தண்ணீர் வாங்கப் போனதாகத் தெரியவில்லை.

சிறிது நேரம் கழிந்தது, ஒருவர் தண்ணீர் வாங்கக் கிளம்பினார்.

அது யார் தெரியுமா? மயங்கிக் கீழே விழுந்து கிடந்தாரே... அவரேதான் எழுந்து போனார்!

(அப்படிப்பட்ட உலகம் இது!)

**மேடையில் தலைவர்** : ஏதோ எங்களுடன் போட்டி போட்டு பிரியாணி போட்ட எதிர்க்கட்சி அதில் உப்புப் போட மறந்துவிட்டதாக எங்களுக்கு தகவல் வந்தது, பிரியாணியில் உப்புப் போட மறப்பவர்கள், நாளைக்கு ஜெயித்து வந்தால் நாட்டுமக்களை நினைப்பார்களா? நினைத்துப் பாருங்கள். உங்களுக்கு இப்படி ஒரு (க)சப்பான அரசு தேவையா ?

தொண்டர் மெதுவாக அவரது காதில் (தலைவா பிரியாணியில் உப்பு போட மறந்தது நம்ம கட்சிதான்)


**மேடையில் தலைவர்** : .... இப்படியெல்லாம் எதிர்க்கட்சி உங்களை குழப்பி விடுவார்கள், உப்பு உடலுக்கு நல்லதல்ல என்பது மக்கள் மீது அக்கறை கொண்ட எங்களுக்கு மட்டும் தான் தெரியும்.













பேரன் : தாத்தா உங்க அறுபதா வது கல்யாணத்த விமரிசையாக செய்யப்போறேன்!

தாத்தா: அதுக்காவது நல்ல பொண்ணா பாருடா...





# மனதை உலுக்கிய மர்மம்

பட்டால்தான் தெரியும் என்பார்கள். அது உண்மைதான் என்பதற்கு எனக்கு நேர்ந்த இந்த திகில் சம்பவமே போதும். ஏனெனில் நான் பேய், பிசாசு போன்றவற்றை நம்பியதே இல்லை. யாருக்காவது பேய் பிடித்துள்ளது என்று கூறினால் அவர்களின் மடமையை எண்ணிச் சிரிப்பேன். ஆனால், எனக்கே ஒருமுறை பேய் பிடித்தது. அதனால் நிகழ்ந்த அனர்த்தங்கள் மறக்க முடியாதவை.

நான் விடுமுறை நாட்களில் கண்டிக்கு தனியார் வகுப்புகளுக்கு சென்று வருவேன். மாலை 4.30 இற்கு பஸ்ஸில் ஏறினால் 7.30 இற்கு வீட்டை வந்தடைவேன்.

வழமை போல் தனியார் வகுப்புக்கு சென்று வரும்போது ஒருநாள் 4.30 மணி. பஸ்ஸைத் தவற விட்டுவிட்டேன்.

பிறகு அடுத்த பஸ்ஸிற்காகக் காத்திருந்தேன். நேரம் செல்லச் செல்ல பஸ் தரிப்பிடத்தில் சனக் கூட்டமும் அதிகரித்தது. அங்கு மக்கள் ''இன்று மே தினம் தானே! அது தான் பஸ் குறைவு'' என்று கதைத்துக் கொண்டார்கள் எனக்கு பயம் அதிகரித்தது.

நான் தனிமையில் என்ன செய்வேன்? என்று யோசிக்கும் போதே ஒரு பஸ் வந்தது. அனைவரும் அவசரமாக ஏறினார்கள். அப்போது மணி 6.30 ஐயும் தாண்டி இருந்தது! நேரம் செல்லச் செல்ல எனக்கு பயம் அதிகரித்தது!

வீட்டுக்குச் செல்ல கிட்டதட்ட 10.00 மணியாகும். பஸ்ஸைவிட்டு இறங்கி வீட்டுக்கு சற்று தூரம் நடக்கவும் வேண்டும். கையில் தொலைபேசியும் இல்லை. என்ன செய்வது என யோசித்தேன்.

என்னுடன் வழமையாக வரும் இரண்டு நண்பிகளும் வந்திருந்தால் எனக்கு இந்தப் பயம் வந்திருக்காது.

சன நெரிசல் அதிகம் என்பதால் கூட்ட நெரிசலில் உடல் களைப்போடு மனபயமும் அதிகரித்தது.

எனக்கு அருகில் இருந்த அக்கா ஒருவரிடம் தொலைபேசியைக் கேட்டு அதை வாங்கி நான் பஸ்ஸில் வருவதாகவும் யாராவது நான் இறங்கும் இடத்திற்கு வரும்படியும் அம்மாவுக்கு கூறினேன்.

இரவு 9.30 மணி!

பஸ் எனது ஊரை வந்தடைந்தது. பயத்தோடும் கவலையோடும் இறங்கினேன். பஸ் நிலையத்தில் எனது அண்ணா நின்றிருந்தார். அவரைப் பார்த்த பிறகுதான் எனக்கு மூச்சே வந்தது.

ஆனால், இன்னும் சிறிது நேரத்தில் நடக்கப் போகும் விபரீதம் பற்றித் தெரியாமல் நிம்மதிப் பெருமூச்சு விட்டேன்.

நானும் அண்ணாவும் கதைத்துக்கொண்டே நடக்க ஆரம்பித்தோம். சிறிது தூரம் சென்றதும் ஒரு சிறிய கடைத் தெரு உள்ளது! அனைத்து கடைகளும் மூடப்பட்டு இருந்தன. அதில் எனது தாய்மாமனுக்குச் சொந்தமான கராஜ் (வாகனம் திருத்தும் இடம்) மட்டும் திறக்கப்பட்டு இருந்தது.

நான் அண்ணாவிடம் இந்த நேரத்திலும் இங்கே வேலை நடக்கின்றதா? என வினவினேன்.

அப்போது அண்ணா அதுதானே! நான் வரும் பொழுது கடை மூடித்தானே இருந்தது? அத்தோடு இன்று மாமா கடை திறக்கவே இல்லை. அவர் இன்று பதுளையில் மாமி வீட்டுக்குப் போயுள்ளார். சரி சில நேரம் மாமா வந்திருப்பாரோ தெரியாது? வா போய் பார்த்துவிட்டுச் செல்வோம் என்று கூறி கடையை நோக்கி நடந்தார்.

நானும் உடன் சென்றேன். இருவரும் கடை வாசலில் இருந்து எட்டிப் பார்த்தோம். ஒருவருமே இல்லை. என்ன அதிசயம்!

ஆனால், உள்ளே சுத்தியலால் அடிக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

மாமா... என கூப்பிட்டுப் பார்த்தோம். எனக்கு ஒன்றும் புரியவில்லை கடையில் ஒருவரும் இல்லை. ஆனால், வேலைகள் நடக்கின்றன.

உள்ளே சென்று பார்த்தோம். சத்தம் சட்டென நின்றது.

நானும் அண்ணாவும் ஓட ஆரம்பித்தோம். தலை சுற்று வந்து அண்ணா... என்று கத்தியது மட்டும் எனக்குத் தெரியும்.

அதன்பின் நான் பல நாட்கள் கழிந்த பின்தான் சுயநினைவு பெற்றேன்.

மயக்கம் தெளிந்தும் நான் சுய நினைவு பெறவில்லையாம். அப்பா, அம்மா என்னை ஒரு பூசாரியிடம் கூட்டிச் சென்று காட்டியபோது அவர் எனக்கு பெண்மீது ஆசையுள்ள ஒரு ஆண் பேய் பிடித்துள்ளது என்று கூறி ஏதேதோ மந்திரித்து நூல் போட்டுள்ளார்.

அதன் பிறகு இரண்டு நாளைக்குப் பின்புதான் நல்ல நினைவு திரும்பியது.

அதன் பிறகுதான் நான் எனது வீட்டில் எல்லோரையும் தாக்கி குறிப்பாக எனது அம்மா, தங்கை பக்கத்து வீட்டு அக்காமார்களையும் மிகவும் துன்புறுத்தி இருக்கின்றேன் எனத் தெரிந்தது.

மாமாவின் கடையில் வேலை செய்த பையன் தன் காதல் தோல்வி காரணமாக இரண்டு மாதங்களுக்கு முன் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டான். அவனது ஆவியே என்னைப் பிடித்திருந்தது என்று சொன்னார்கள்.

எது எப்படியாயினும் அன்று நடந்த சம்பவம் என் மனதைவிட்டு இன்னும் அழியாமல் இருக்கின்றது.

அன்றிலிருந்து நான் கண்டியில் உள்ள தனியார் வகுப்புகளுக்குச் செல்வதும் இல்லை. இரவு நேரங்களில் தனியாகச் செல்வதும் இல்லை.



தகவல் தொகுப்பு:- ஆர்.அபி

## திகில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

பேய் இருப்பது உண்மையா? பொய்யா என்ற விவாதங்கள் ஒரு புறமிருக்க பேய் என்ற பெயரைக் கேட்டதுமே பலருக்கு கிலி பிடித்துவிடும். நள்ளிரவு, தனிமை போன்ற சூழ்நிலைகளில் சும்மா ஒரு கயிற்றுத்துண்டைக்கூட பேய் என நினைத்து அலறிவிடுவார்கள். நீங்கள் அல்லது உங்கள் நண்பர்கள் சந்தித்த பேய் பற்றிய அனுபவம் உள்ளதா? அதை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எமது முகவரி
உதயசூரியன் திகில் அனுபவங்கள்
இல-68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு 15.








விருது : (விளையாட்டு வீராங்கனை)
சார்னியா மிர்சா.



விருது : (இந்த ஆண்டில் அதிகமாக கவரப்பட்ட பெண்)
ஹன்சிகா மோத்வானி























தென்னிந்திய JFW பெண்களுக்கான பத்திரிகை ஒன்றின் ஐந்தாவது பதிப்பு விழா கடந்த மாதம் நடைபெற்றது. இவ் விழாவில் சாதனைப் பெண்களை கௌரவிக்கும் முகமாக விருதுகள் வழங்கப்பட்டன. டெனிஸ் வீராங்கனை சார்னியா மிர்சா, நடிகைகளான த்ரிஷா, ஹன்சிகா, முதுபெரும் நடிகை சரோஜாதேவி ஆகியோருடன் டாக்டர் தெசே தோமஸ், அலர்மேல் வள்ளி, சுஜாதா மேனன், தீபிகா பள்ளிகல் ஆகியோர் விருதுகளை பெற்றுக்கொண்டனர். மேலும் இந் நிகழ்வில் மாதவன், விஜய் ஜேசுதாஸ், ஜீவா, தனுஷ், ஹரிஸ் ஜெயராஜ், குஷ்பு, அஞ்சலி, ஆண்ட்ரியா உட்பட பல பிரபலங்கள் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை எசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (68, எலிஹவுஸ் ரோட், கொழும்பு 15) 11.04.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது